
# திருப்பம்

**Thiruppam**

அரசியல், கலை, இலக்கிய சமூக மாத ஏடு

*A Monthly of Politics, Arts, Literature and Social Issues*

ஜூலை 15 - ஆகஸ்ட் 14, 1998



விலை: ரூபா 25/=

பம்
78
R

# திருப்பம்

முனை : 01 | ஜூலை 15– ஆகஸ்ட் 14, 1998 | இதழ் : 04

ISSN 1391-376X

நிர்வாக ஆசிரியர்:
த. துரைசிங்கம்

ஆசிரியர் குழு:
பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
வி. ரி. தமிழ்மாறன்
எம். ஏ. றஸ்வி

கணனி அமைப்பு:
மதுரி மாறன்

அச்சுப்பதிவு:
**Perfect Printers,**
130, Dias Place,
Colombo-12

வெளியீடு:
**The Future Foundation,**
215, F/2/6, Park Road, Colombo-5
T.P.: 593331
Fax: 508180

விநியோகம்:
**Lanka Book Depot.,**
F.L.1.14, Dias Place,
Colombo-12
T.P.: 341942

## நெஞ்சோடு நெஞ்சம்......!

வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

எங்கு பார்த்தாலும் எதிர்காலம் ஏக்கம் நிறைந்த கேள்விக் குறியே என்பதை எடுத்துக் காட்டும் நிகழ்வுச் செய்திகள் தான். அவசரகால ஆட்சியின் மூலம் 'கின்னஸ்' சாதனை படைத்து வரும் இலங்கை அதன் பிரசைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் பாடங்களோ ஏராளம், மிகத் தாராளம். இந்த வகையில், தேர்தல்களை எப்படிப் பின்போடலாம், அதற்கு எப்படி அவசரகால நிலையைப் பாவிக்கலாம் என்று ஆராய்ச்சி நடக்கின்றது.

அவசரகால நிலை பிறப்பிக்கப்படுவது நாட்டில் திடீரெனத் தோன்றும் அசாதாரண சூழ்நிலைகளைச் சமாளிக்கவே. ஆனால் ஆராய்ச்சி செய்து, எதிர்க்கட்சியின் உதவியையும் நாடி அவசரகால நிலையைப் பிறப்பிக்கும் ஒரே நாடு உலகில் இலங்கையாகத்தானிருக்க முடியும். அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது சரிதானா என்று வேறு நாடுகளில் நீதிமன்றத்தில் வாதிட வசதியுண்டு. இங்கே அதெல்லாம் .... கப்..... சிப்...!

சட்டத்தின் ஆட்சி தேயத்தேய– மக்கள் சட்டத்தை விடுத்துத் தங்களைத் தாங்களே நம்பும்படி நிர்ப்பந்திக்கப் படுவார்கள். அப்போது ஜனநாயகம் காணாமல் போய் விடும். ஆயுதங்கள் நடமாடத் தொடங்கிவிடும். இங்கேயும் அந்தப் போக்கு இல்லையென்று நிச்சயமாகக் கூறமுடியுமா? கறுப்பாய்த் தெரிவது ஜூலைகள் மட்டுந்தானா?

** **

இம்முறையும் ஏகப்பட்ட முறைப்பாடுகள். எல்லாமே "திருப்பத்தைத் தேடி அங்கும் இங்குமாக அலைய வேண்டியதாயிற்று" என்பதாகவே இவற்றுள் பல அமைந்திருந்தன. தபால் மூலம் அனுப்புங்கள் என்று அன்பு வேண்டுகோளும். சந்தோஷச் செய்தி – சந்தாப் பத்திரத்தை இணைத்திருக்கிறோம் என்பதுதான். வாசியுங்கள். கருத்துகளைக் களமிறக்குங்கள்!

அன்புடன்
ஆசிரியர்

*IN THE MARKET PLACE OF IDEAS*

விரைவில் ஆரம்பமாகின்றது!

இனங்களின் போராட்ட வரலாறு தந்த

**சிசெரோவின்** கைவண்ணத்தில்

திருப்பத்துக்கென பிரத்தியேகப் படைப்பு

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்**

(முழுமையான வரலாற்று ஆய்வு)

பத்திரப்படுத்த வேண்டிய கட்டுரைத் தொடர்!

காத்திருங்கள்.......!

ஐரோப்பாவில்

எமது விற்பனை முகவர்

ஐரோப்பாவின் மிகப்பெரிய

தமிழ்ப் புத்தகசாலை

**தமிழாலயம்**

* ஈழத்துச் செய்திப் பத்திரிகைகள் அனைத்தும் (தமிழ், ஆங்கிலம்)
* ஈழத்து இலக்கியங்கள்
* இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்

விற்பனைக்கும் தொடர்புகளுக்கும்

தமிழாலயம்

39, Bd. de la Chapple

75010 Paris

FRANCE.

T.P.: 33 1 42 05 18 58






# திருப்பத்தினுள்ளே.....


01. மாநில அரசாங்கமொன்று எப்போது கலைக்கப்படலாம்? — 04
வி. ரி. தமிழ்மாறன்

02. ஓ, சோதர! — 10
மு. பொன்னம்பலம்

03. இழப்பு — 11
அஸ்வகோஸ்

04. ஆங்கிலத்தில் எழுதும் இலங்கை எழுத்தாளர்கள் — 12
கே. எஸ். சிவகுமாரன்

05. இந்தோனேஷியாவில் இன்று நடப்பதென்ன? — 14
ஜெயிலானி ரஸ்வி

05. எதிரொலி (சிறுகதை) — 18
நாமகள்

06. நேருக்கு நேர்- — 24
த. சித்தார்த்தன் எம்.பி.

07. தமிழ்த் திரை உலகை தலை நிமிர வைத்தவர்கள் — 32
சின்னராசு

08. மறுசீரமைப்புக் கோட்பாடும் கல்விச் செயற்பாடும் — 39
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

09. எழுத்தும் வாழ்வும் ஒரே பாதையிலா? — 47
நரகத்துமுள்ளு

10. மதுரனிடம் கேளுங்கள் — 53

11. யாழ்ப்பாண சமூகமும் சீதனப் பிரச்சனையும் — 55
கொம்மிஞ்ஞன்

12. கிடைக்கப் பெற்றோம் (நூலகம்) — 61

## மாநில அரசாங்கம் ஒன்று எப்போது கலைக்கப்படலாம்?

# இந்திய அரசியலமைப்பின் உறுப்புரை (356) பற்றிய ஒரு கண்ணோட்டம்

வி. ரி. தமிழ்மாறன்
முதுநிலை விரிவுரையாளர், சட்டபீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### பாரதீய ஜனதா அன்றும் இன்றும்

பா. ஜ. கட்சியின் ஆட்சியில் இருந்த மத்திய பிரதேசம், ஹிமாசலப் பிரதேசம், இராஜஸ்தான் என்பவற்றின் பேரவைகள் 1992 டிசம்பர் 15ஆந் தேதி கலைக்கப்பட்டன. சில சமயத் தாபனங்கள் மீது மத்திய அரசு (காங்கிரஸ்) விதித்திருந்த தடையினை இந்த மாநிலங்கள் சரிவர அமுல்படுத்த வில்லை என்ற காரணத்தினாலேயே கலைப்பு நடைபெற்றது. இவற்றின் முதலமைச்சர்கள் தடைசெய்யப்பட்ட RSS என்ற இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற காரணமும் இந்த மாநில அரசாங்கங்கள் கரசேவகர்களை அயோத்தி செல்வதற்கு ஊக்குவித்தன என்ற காரணமுஞ் சேர்ந்து கலைப்புக்கு வித்திட்டன. ஆனால், இந்த மாநிலங்கள் மத்திய அரசின் பணிப்புகளை மீறிச் செயற்பட்டன என்பதற்கோ அல்லது RSS தொடர்பு பற்றியோ எவ்வித ஆதாரமோ காட்டப்படவில்லை. மூன்று மாநிலங்களதும் ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய அறிக்கைகள் (24 மணித்தியாலத்துக்குள் சென்றடைந்தன) மூன்றும் ஒரேவிதமான சொற்களைக் கொண்டிருந்தன. வெறுமனே சந்தேகத்தின் மீது கலைப்பது என்பது 356இன் தவறான பாவனைக்குத் தகுந்த உதாரணமே யாகும். ஏனெனில் இங்ஙனம் மூன்று பேரவைகள் கலைக்கப்பட்டதன் பின்னரும் இந்த மாநிலங்களில் வன்முறை குறையவில்லை. அத்துடன் அயோத்தி பிரச்சனைக்குப் பின்னர் மாநிலவாரியாகப் பார்த்தால் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலங்களைவிட காங்கிரஸ் ஆண்ட மாநிலங்களிலேயே கூடுதல் வன்முறைக் கலகங்கள் இடம் பெற்றிருந்தன.

மேலும் மத்திய-மாநில உறவுகளை ஆராய்வதற்கென சர்க்காரியா ஆணைக்குழு (1990) செய்திருந்த சிபார்சுகளும் ஆலோசனைகளும் அடியோடு கவனத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டது. இந்த அறிக்கையில் 356 பற்றிக் கூறும்போது: "அரசியல் நெருக்கடி, உள்நாட்டுக் கிளர்ச்சி, மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறையின் அரசியலமைப்பு ரீதியான பணிப்புரைகளைப் புறக்கணித்தல் அல்லது தெளிவாகத் தெரிகின்றதான சட்டம், ஒழுங்கு ஸ்தம்பித நிலை என்பவற்றின்போது மட்டுமே உறுப்புரை 356 பயன்படுத்தப்பட வேண்டும்".

அப்படியானதொரு நிலை இந்த மூன்று மாநிலங்களிலும் இருந்திருக்க வில்லை. மத்திய பிரதேசம் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்றம் மத்திய அரசின் முடிவு செல்லுபடியற்றதெனக் கூறிவிட்டது. "அரசியலமைப்பு இயந்திரம் எங்ஙனம் ஸ்தம்பிதமானது என்பதை ஆளுனரின் அறிக்கையிலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. மத்திய அரசின் பணிப்புரைகளை மீறியமைக்கும் சான்றில்லை. சட்டம், ஒழுங்கு சீர்கெடலானது திடீரென்ற வன்முறைப் பரவலால் என்றால் அதற்கென கடும் நடவடிக்கை தேவையில்லை. இராணுவத்தைப் பாவிக்க முடியுந்தானே" என்றும் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

ஆயினும் பின்னர் வந்த *S.R.Bommai v. Union of India* வழக்கில் (1994(2) SC 215) உச்ச நீதிமன்றத்தின் 9 நீதியரசர்கள் - மேற்சொன்ன மூன்று மாநில அரசாங்கங்களும் கலைக்கப்பட்டது சரியே என்று தீர்ப்பு வழங்கினர். இது மிகப் பிரசித்தி பெற்ற வழக்கு என்பதுடன் இந்திய அரசின் தன்மை (State structure), அரசியலமைப்பின் தத்துவங்கள் என்பனவும் இதில் நன்கு அலசப்பட்டன. 'மதச்சார்பின்மை' இந்திய அரசியலமைப்பின் ஓர் அடிப்படை அம்சம் என்றும் இந்த இலட்சியத்துக்கு மாறாக ஏதேனும் மாநில அரசாங்கம் செயற்படின் அதனை ஜனாதிபதி கலைத்துவிடலாம். அரச விவகாரங்களில் மதத்துக்கு இடமில்லை. இந்தியாவின் எந்தவொரு அரசியற் கட்சியும் ஒரே நேரத்தில் மதக் கட்சியாகவும் அரசியற் கட்சியாகவும் இருக்க முடியாது. அரசியலும் மதமும் கலக்கப்பட முடியாது என்பதே எமது கொள்கை என்று கூறியது. இராஜஸ்தான் வழக்கில் நீதிமன்றம் கூறியதான நியாயாதிக்கத் தத்துவங்களையும் அது உறுதிப்படுத்தியது.

### ஜனாதிபதி எப்போது 'திருப்தி'படலாம்?

உறுப்புரை 356(1) இல் உள்ளபடி "ஆளுனரின் அறிக்கையைப் பெறுவதன் மேல் அல்லது <u>வேறுவிதமாக</u> திருப்திப்படுமிடத்து என்பதில் <u>வேறுவிதமாக</u> என்பது சட்ட சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது.

ஆளுனர் கட்டாயமாக அறிக்கை சமர்ப்பித்தால்தான் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க முடியுமா? ஆளுனர் அறிக்கை சமர்ப்பிக்க மறுத்தால் என்ன நடக்கும்? அல்லது ஆளுனர் மாநில அரசாங்கத்துக்கு ஆதரவான அறிக்கையைத் தந்தால் என்ன நடக்கும்? 1991 கருணாநிதி அரசாங்கம் ஆளுனர் அறிக்கை இன்றே கலைக்கப்பட்டது.

இந்தப் பிரச்சனைக்கு விடைகாண முதலில் உறுப்புரை 355ஐக் கவனிக்க வேண்டும். வெளியார் ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் கலவரம் என்பவற்றிலிருந்து ஒவ்வொரு மாநில அரசாங்கத்தையும் பாதுகாத்து அவை அரசியலமைப்புக்கு இயைந்தொழுகும் சூழ்நிலையை ஏற்படுத்துவது மத்திய அரசாங்கத்தின் கடப்பாடாகும். மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருப்பவர் ஆளுனர் என்றளவில் - மாநில அரசாங்கம் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றதா என்பதைக் கவனித்து அறிக்கையிட வேண்டியது அவரது பொறுப்பாகின்றது.

எனவே ஆளுனர் அறிக்கையைக் கொடுக்கும் கடப்பாடுள்ளது. ஆனால் அவர் இங்ஙனம் செயற்பட மறுத்தால் அரசியலமைப்பின் நோக்கமே தடுமாறிவிடும். அதாவது ஆளுனர் - மத்திய அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் சூழ்நிலை ஏற்படும். இங்கு முக்கியமானது அறிக்கையுண்டா இல்லையா என்பதல்ல. அரசியலமைப்புக்கு என்ன நடக்கின்றது என்பதேயாகும். எனவேதான் otherwise என்ற சொல்லையுஞ் சேர்த்திருக்கின்றார்கள்.

'Otherwise' என்ற சொல்லை ஏன் சேர்க்கிறோம் என்று விளக்கமளிக்கையில் Dr. அம்பேத்கார் - வரைவுறுப்புரை 277A (இன்று 355) மத்திய அரசாங்கத்தின் மீது கடமையையும் கடப்பாட்டையும் விதிக்கும்போது ஜனாதிபதியின் நடவடிக்கையை ஆளுனரின் அறிக்கையின் மேல் என்று மட்டுப்படுத்துதல் முறையல்ல. ஆளுனர் அறிக்கை தராமலே விடுகின்றார் என்று வைப்போம். ஆனால் தலையிட வேண்டுமென்று ஜனாதிபதி விரும்புகிறார். இந்நிலையில் 277A ஐக் கருத்தில் கொண்டு ஜனாதிபதிக்கு நடவடிக்கைச் சுதந்திரம் இருக்கவே வேண்டும். தனக்குக் கிடைக்கும் வேறு நிகழ்வுகளின் அடிப்படையில் அவர் செயற்படக் கூடாதா (*Constituent Assembly Debates*, Vol. IX, p.134).

இதன்படி பார்க்கின் 356இன் கீழ் ஜனாதிபதி சுயமாகவே செயற்பட முடியும். "அரசியலமைப்பு ரீதியில் எண்ணியும் பார்க்க முடியாத ஒரு சில விடயங்கள் 356 இலுள்ள "Otherwise" என்ற சொல்லின் கீழ் இடம்பிடித்து விட்டன" என்று Chandra Pal Shereon குறிப்பிடுவதும் சாலவே பொருந்துகின்றது. (*Journal of Constitutional and Parliamentary Studies*, 1986, p.91).

"Otherwise" என்ற சொல் இருவழிகளில் பொருள் கொள்ளப்படலாம். ஆளுனர் அறிக்கை தராதபோதிலும் ஜனாதிபதி சுயமாக - நிகழ்வுகளை அறிந்து (அமைச்சரவை மூலம் அல்லது வேறுயாரிடமிருந்தும்) செயற்படலாம். இது ஒரு வழி. மறுவழியில், ஆளுனரின் அறிக்கை கிடைப்பினும் அதை நிராகரித்துஞ் செயற்படலாம்.

இங்ஙனம் ஆளுனரின் அறிக்கை இல்லாது ஜனாதிபதி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் மூன்றே தடவைகளில் இடம்பெற்றுள்ளன. 1977, 1980 (பொதுத் தேர்தலையடுத்து ஒன்பது சட்டசபைகள் கலைக்கப் பட்டமை), 1991 (தமிழ்நாடு அரசாங்கம் கலைக்கப்பட்டது). இதுபற்றி Durga Basu எழுதுகையில், மாநிலம் அரசாங்கம் பற்றிய ஆளுனரின் அறிக்கையானது அவரது சொந்த மதிப்பீட்டின்படியும் தற்றுணிபுப் பிரயோகத்தின்படியும் (discretion) அமைந்திருத்தல் வேண்டும் என்கிறார். (*Commentary on the Constitution of India*, Vol.3. 1965 p.225).

Varadachari யின் கருத்தில் அரசியலமைப்புச் செயற்பாடுகள் பூரண ஸ்தம்பிதமடைவது எப்போதென்றால்- பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற பெரும்பான்மைக் கட்சி பதவியேற்க மறுப்பதுடன் சிறுபான்மைக் கட்சி பதவியேற்றலைத் தடுத்தும் நிற்கையில்; தெளிவான பெரும்பான்மை எவருக்கும் இல்லாமல் போவதுடன் கூட்டணி அரசாங்கம் அமைக்கும் முயற்சியும் தோல்வியுறின்; கட்சிகளின் உடைவால், கட்சி தாவுதலால் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுமிடத்து; மாநிலத்தில் பல குழுக்களிடையேயான மோதலால் அரச நிர்வாகம் கொண்டு நடாத்தப்பட முடியாத சூழ்நிலை ஏற்படல்; மாநில அமைச்சரவை அரசியலமைப்புக்கு மாறாகச் செயற்பட முனையின்; மத்திய அரசின் பணிப்புரைகளை உதாசீனப்படுத்தின்; தோல்வியையடுத்து ஓர் அமைச்சரவை பதவி விலக இன்னொன்று பதவியேற்க முன்வராதபோது; வழக்கமான பாராளுமன்றச் சம்பிரதாயங்கள் சபாநாயகரால் வேண்டுமென்றே மீறப்படுமிடத்து; திட்டமிட்ட விதத்தில் பயங்கரவாதம், மற்றும் சிவில் அதிகாரிகளுக்கான அச்சுறுத்தல் மாநில அமைச்சரவையின் துணையுடன் அல்லது துணையின்றி மேற்கொள்ளப் படின்; அமைச்சரவை நிர்வாகத்தின் மீது முற்றாகவே கட்டுப்பாட்டை

இழக்கும் சூழ்நிலை ஏற்படின் - மட்டுமே மாநிலப் பேரவை ஒன்று கலைக்கப்பட வேண்டியதாகிறது. (*Governor in the Indian Constitution*, Heritage Publishers, New Delhi, 1980, p.89).

இராஜஸ்தான் வழக்கிலும் பொம்மை வழக்கிலும் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையில் பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டுமென்றே நீதிமன்றம் எதிர்பார்க்கும் எனலாம்:

1) ஆளுனரின் எழுத்துமூலமான அறிக்கையின்றி ஜனாதிபதி ஆட்சி பிறப்பிக்கப்பட முடியாது;

2) மாநில அரசாங்கம் மதச்சார்பின்மைக்கு எதிராகச் செயற்படின் கலைக்கப்படலாம்;

3) மத்தியில் புதிய கட்சி பதவிக்கு வருமாயின் எதிர்க்கட்சிகள் வசமுள்ள மாநில அரசாங்கங்களை ஒரேயடியாகக் கலைத்துவிட முடியாது;

4) அரசியற் காரணங்களுக்காக மாநிலப் பேரவை கலைக்கப்படின் உச்ச நீதிமன்றம் அப்பேரவையை மீண்டும் கூடுமாறு உத்தரவிட முடியும்;

5) ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனமும் மாநிலப் பேரவைக் கலைப்பும் ஒன்றாகவே செய்யப்படக் கூடாது. இரண்டும் வெவ்வேறு விடயங்கள்;

6) மத்திய அரசாங்க தீர்மானத்தைப் பாராளுமன்றம் அங்கீகரித்த பின்னரே சட்டப் பேரவை கலைக்கப்பட முடியும்;

7) மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டால், எந்த நிகழ்வுகள் மீது ஜனாதிபதி இந்த முடிவை எடுத்தார் என்பதை உச்சநீதிமன்று அல்லது உயர்நீதிமன்று கேள்விக்குட்படுத்த முடியும், அவற்றை வெளியிடவும் முடியும்;

8) 356இன் கீழ் ஜனாதிபதியின் அதிகாரமானது அரசியலமைப்பு அதிகாரம். எனவே அது முழுமையான (absolute) அதிகாரமல்ல. ஜனாதிபதி திருப்திப்பட்டுத் தீர்மானம் எடுப்பதற்கு அவசியமான நிகழ்வுகள் இருக்க வேண்டும் என்பது ஒரு முன் நிபந்தனையாகும்.

மேலேயுள்ள 6வதில் பாராளுமன்றம் என்பது லோக்சபா, மாநிலங்களவை இரண்டையும் குறிக்கும். தற்போதைய கூட்டணி அரசாங்கத்துக்கு மாநிலங்கள் அவையில் பெரும்பான்மைப் பலம் இல்லையென்பதையும் கவனிக்க வேண்டும்.





இந்த அடிப்படையில் பார்ப்பின், தமிழ்நாடு சட்டப் பேரவை கலைக்கப்படுவதற்கான போதிய காரணங்கள் இருப்பதாகக் கூற முடியாது. ஆளுனர் சட்டம், ஒழுங்கு பற்றிச் சாதகமான கருத்தே கூறியிருக்கிறார். இதையும் மீறி ஜனாதிபதி செயற்படுவதாயின் - அவருக்கு அவசிய நிகழ்வுகள் தரப்பட வேண்டும். அவை என்ன நிகழ்வுகளாக இருக்க முடியும்? கோவையில் வெடித்த குண்டுகளேயாயின்- இதைப்போல் முன்பு பம்பாயிலும் வெடித்துள்ளன. அத்துடன் இது ஒரு திடீர்க் கலவரம். இராணுவத்தால் அடக்கப்படக் கூடியது. இதற்குப் பழியை மாநில அரசாங்கத்தின் மேல் போடமுடியாது. அங்ஙனம் குற்றஞ் சாட்டுவதாயின் அரசியலமைப்புக்கு ஏதேனும் விதத்தில் பாதிப்பு ஏற்படுவதாகக் காட்டும் நிகழ்வுகள் வேண்டும். அத்தகைய நிகழ்வுகள் ஜெயலலிதாவின் கைவசமுள்ளதாகத் தெரியவில்லை.

அத்துடன் வென்றால் மாநில அரசைக் கலைக்கச் சொல்வோம் என்று தேர்தலுக்கு முன்பே ஜெயலலிதா கூறிவிட்டார். இது 'தீயநோக்கு' என்ற சட்டத் தேவைப்பாட்டை நிரூபிக்கப் போதுமானதாகி விடும். எனவே அரசியல் நிர்ப்பந்தங்களினால் தமிழ்நாடு பேரவை கலைக்கப்பட்டாலும் - மிகச் சிக்கலானதும் அதே வேளை சுவையானதுமான அரசியலமைப்பு வழக் கொன்றை இந்தியமக்கள் சந்திக்க வாய்ப்புமுண்டாகும் எனலாம். ■

## அட்டைப்படக் கவிதை

உண்மை வியாபாரி
ஓர்நாள் தன்
புத்தகத்தை எம்மிடம்
வழங்கினான் ---
அதன் காப்பாளன்
மரணசாசனத்தில்
தன் புத்திரர்களுக்கு
அதை சரிபாதியாய்
பிரித்துக் கொடுத்தான்
சொத்துச்சண்டை,
தீராதபகை
வம்சாவழியாய்
போதிக்கப்படுகிறது...!

யார் எந்தப் பக்கம்
சேர்வது?
இனக்கலப்புகள்
கேள்விகள் எழுப்பின
கலகங்கள் துவங்கின...

முடிவாய் சுவர்கள்
எழுப்பப்படுகின்றன
போக்குவரத்துத் தடைசெய்யப்படுகின்றது
மீறுவோர் தண்டிக்கப்படுகின்றனர்
குழுக்களுக்குள் குழுக்கள்
அங்கும் சுவர்கள்,
வேலி, தடை ...
பயப்பீதி. தீவிரம்.
கோமாளித்தனம்,
சேதம், அவ்வப்போது அமைதி
அய்யனே எப்போது
திரும்பப்பெறுவாய்
எங்கள் சின்னங்களுக்குள்
எரிந்த உன்
உண்மைப் போதனைகளை
எங்கள் வசதிக்கேற்ப
வளர்க்கப்பட்ட நகல்கள்
எம்மிடம் உண்டு
வயிற்றுக்கு வக்கில்லாதபோது
செவிகள் இவற்றால்
நிரப்பப்படும்!

-தேன்மொழி-

# ஓ, சோதர!

மு.பொன்னம்பலம்

எங்கும் திகில், மௌனம்,
எழுகின்ற மென் காற்றில்
துன்பச் சுமை, துயரம்.
சோதர,
இங்கே வா,
கொஞ்சம் தியானிப்போம்
இத்தினத்தில்!
இது ஓர் கூட்டுத் தியானம்
வந்திங்கே குந்தப்பா!


கோலம் அழிந்து, குவலயமே
ஜீவஇசைத்
தந்தி அறுந்துபோய்
யாழ்தூரக் கிடக்கிறது!
யாவர்க்கும் உயிரான
ஆழ்ந்த இசை விரிக்கும்
அமைதிப்படுகையிலே
அன்புலகு நடந்து காலம் பலவாச்ச!
ஓங்காரம் எங்கும் உதைப்பெடுக்க
உதிரம் நுரைத்து
உமிழ்கின்ற வெப்பத்தில்
எஞ்சியிருந்த ஈசன் சிறுகுடிலும்
தீப்பட்டெரிகிறது!
சோதர, இத்தினத்தில்
கொஞ்சம் தியானிப்போம்
இங்கே வா,
இது ஓர் கூட்டுத்தியானம்
வந்திங்கே, குந்தப்பா!
கோலம் புனைந்த குவலயத்தின்
நுதல் எறித்த
நீதிவிழி பிதுங்கி
நிலம் விழுந்து துடிக்கிறது!
எங்கும் மனிதம் இருப்பிழந்து
தவிக்கிறது!
கொட்டும் மழையில்,
குளிரில், பனிக்காற்றில்–
போகும் வழியெங்கும்
ஈர விற கூதி
"யாகம்" வளர்க்கும் அகதிப்
புதுமனிதம்.....
இருப்பே சுமையாக
இந்நிலத்தில் கால் எங்கும்
தரிக்க முடியாத சாபத்தில்
சிக்குண்டு
அந்தரிக்கும் இப்புதிய "ஹரி"
ஜனங்கள்
கொஞ்சம் இளைப்பாற
ஓ, சோதர!
அறமாய் உருக்கொள்வோம்!
அவ்வாகுதியில் தழல் எறியும்
தீப இதழ் நுதல் தரித்து
செயற்படுவோம் வாருங்கள்!
இது ஓர் கூட்டுத்தியாகம்!

உடலின் மயிர்க்கால்கள்
ஒவ்வொன்றும் உள்ளொளியை
துளிர்த்து வெளிச் சுடர்த்த
சூக்குமத்தின் உள்நுழைவோம்



சட்ட விளக்காக நின்றெரிந்து
தியானிப்போம்!

ஓ சோதர! இங்கே பார்!
நெஞ்சக் கருவறையில் நிஷ்டையில்
இருக்கின்ற
நஞ்சுண்ட கண்டனை நாம்
அழைத்து வெளிவருவோம்
தீமை அழிக்கின்ற செஞ்சடையோன்
வெளிவந்து
கால்தூக்கி ஆடட்டும்! கபாலங்கள்
குலுங்கட்டும்!
சொந்தத் தனிக்காலில் நின்றாடும்
கூத்தனின்
அந்தவழி புகுவோம்!
அகதிப் புதுமனிதம் கதிபெற்று
ஓங்கட்டும்!
அதனால்,
ஓ சோதர! இது ஓர் கூட்டுப்
பெரும் யாகம்!
வந்திங்கே குந்தப்பா!



# இழப்பு

அஸ்வகோஸ்

கதவினைத் திறந்து வைத்தேன்
போகின்ற காற்று என் கதவை
தட்டிவிட்டுப் போனது போல்
நான் விழித்திருந்தேன் நெடுநேரம்
கதைப்பதற்கு ஜீவனின்றி.

என் கனவுகளிற்கு உரம்போட
யாரும் வரவில்லை
இனி நடைத்துணையை
எங்கு தேட?

ஆத்மா உறங்குமென்று
இரவுகளில் விழித்திருந்தேன்.
கனவு கூட இனி இல்லையென்று
போகின்ற காற்று (நீ தான்!)
என் கதவைத் தட்டிவிட்டுப்
போனதுபோல்!
ஆனாலும்
நான் விழித்திருந்தேன் நெடுநேரம்!



தகவற் களம்

# ஆங்கிலத்தில் எழுதும் இலங்கை எழுத்தாளர்கள்

கே. எஸ். சிவகுமாரன்

உலக கலை/இலக்கிய/ சினிமா வட்டாரங்களிலே மைக்கல் ஒண்டார்ஜி (Michael Ondaatje) இன்று ஒரு பிரபல எழுத்தாளர். இவர் இலங்கையில் பிறந்து கனடாவில் வாழும் ஓர் நாவலாசிரியர். தென்னிந்திய மூதாதையரைக் கொண்ட டச்சுப் பறங்கியர் இவர்.

சில ஆண்டுகளுக்கு முன் இவருக்கு பூக்கர் (Booker) பரிசை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த கௌரவமான ஆங்கிலேயப் பரிசைப் பெற்ற முதல் ஆசியாக் கண்ட எழுத்தாளர் மைக்கல் ஒண்டார்ஜி ஆவர்.

இவர் எழுதிய நாவல் ஒன்றின் பெயர், ஆங்கிலேய நோயாளி (The English Patient). இதனைத் தழுவி ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டது. இந்தப் படம் பல ஒஸ்கார் (Oscar) விருதுகளைப் பெற்றது. மைக்கல் ஒண்டார்ஜியின் சகோதரர் ஒருவரும் கனடாவில் பிரபல ஆங்கில எழுத்தாளராக விளங்குகிறார்.

மைக்கல் ஒண்டார்ஜி போன்றே ரொமேஷ் குணசேகர, ஷியாம் செல்வதுரை, யஸ்மின் குணரத்ன, கார்ள் மலர், ஜேம்ஸ் குணவர்த்தன, சீதா குலதுங்க, புண்யகாந்தே விஜயரத்ன, அழகு சுப்பிரமணியம், சி. வி. வேலுப்பிள்ளை, தம்பிமுத்து போன்ற இன்னுஞ் சில இலங்கையர் அனைத்துலக எழுத்தாளர் வட்டங்கள் சிலவற்றில் அறியப்பட்டவர்களாக விளங்குகிறார்கள். இவர்கள் ஆக்க இலக்கியகாரர் ஆவர்.

இவர்களை விட, வேறு சிலர், ஆங்கில மொழியில் எழுதி ஓரளவு கவனத்தைப் பெற்ற பல்கலைக்கழக உயர்மட்ட (Academic) ஆசிரியராவர்.

இலங்கையின் தூதுவராக பிரான்ஸ் நாட்டில் பணிபுரிந்த எதிரிவீர சரச்சந்திர என்ற சிங்கள மொழிப் பேராசிரியர் ஆங்கில மொழியில் எழுதிய "பிச்சைப் பாத்திரம்" (The Begging Bowl) என்ற நாவலும், தரம் பிரித்துப் படிக்கும் வாசகர்களிடையே கவனத்தைப் பெற்றது. இவருக்குக் கேரள மாநில ஆய்வறிவாளர்கள் குமரன் அஸன் பரிசை வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையைச் சேர்ந்த ஒரு சில தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் படைப்புகள் பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. ஒரு சில ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பிரெஞ்சு, நோர்வேஜியன் போன்ற மொழிகளில் சுயமாக எழுதப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில்





எழுதப்படும் இலங்கையர் படைப்புகள் பற்றி அபிப்பிராயம் தெரிவிப்பவர்களில் ஒருவர், டி. ஸி. ஆர். ஏ. குணதிலக. இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியர். கலைக்கழ்க ஆங்கிலப் பிரிவின் தலைவர்.

ஷிவா நைப்போல் என்ற மேற்கிந்தியப் பிராந்திய ஆங்கில மொழி எழுத்தாளர், தமது பிரயாண நூலொன்றிலே, இந்த டி. ஸி. ஆர். குணதிலக பற்றிய ஓரிரு வசனங்களை எழுதியுள்ளார். ஜோசப் கொன்றட் (Joseph Conrad) என்ற, ஆங்கில மொழியில் எழுதிய போலந்து தேசத்தவர் நாவல்களை மதிப்பீடு செய்வது உட்படப் புலமைத்துவம் வெளிப்படும் சில நூல்களை ஆங்கிலத்தில் இவர் எழுதியிருக்கிறார். இவரைப் போலவே, யஸ்மின் குணரத்ன என்ற பேராசிரியையும் ஜேன் ஒஸ்டின் (Jane Austen) என்ற ஆங்கில நாவலாசிரியை பற்றி புலமைமிக்க ஆய்வை எழுதியுள்ளார்.

இந்தியாவில் இயங்கும் பெங்குவின் (Penguin) வெளியீட்டாளர்களுக்காக, இலங்கை எழுத்துக்கள் தொகுப்புகளை இவர் தொகுத்து இருக்கிறார். இத் தொகுப்புகளில், தமிழ் எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன. இவருக்கு ஆலோசனை கூறியவர்கள் தமது நலன்களைப் பேணும் விதத்தில் சௌகரியமாகத் தமிழ் எழுத்துக்கள் சேர்க்கப்பட உதவியுள்ளனர். பூரண பிரதிநிதித்துவம் இவருடைய தொகுப்புகளில் இல்லை. ■

(☞ 62 )

முதலாவது இதழ். ஆசிரியர் மிகுந்த ஆர்வமும் முயற்சியும் உடையவர் என்பது சரி. ஆனால் ஏன் கார்த்திகை 1998 எனக் குறிப்பிட்டுள்ளாரோ தெரியவில்லை. பெரியவர்களிடம் தேடி வாங்கிப் பிரசுரிக்க வேண்டும் என விரும்புகிறார். நல்லது. ஆனால் புதியவர்களை அடையாளங் காட்டுவதே முக்கியமானது. கவனத்தில் கொள்வாரென நினைக்கின்றேன்.

6. பத்திரிகை : **மீள்பார்வை**
இதழ் 26 ஜுலை 1998
விலை ரூபா 10/=
வெளியீடு :63/5/B/C Stace Road,
Colombo-14.

முன்னைய இதழ்களுஞ் சேர்ந்து கிடைத்துள்ளன. இஸ்லாமியப் பார்வையில் நாட்டு நடப்பையும் உலக விவகாரங்களையும் ஆய்வுக் கண்ணோக்கில் அணுகி வரும் பத்திரிகை. இது இஸ்லாமியர்களுக்கான பத்திரிகை என்று மட்டும் மட்டுப்படுத்தப்பட முடியாத பத்திரிகை. சற்றுப் பார்வையை அகலமாக்கி–மாற்றங்களுக்கான தேவையை அலசும் நெகிழ்ச்சிப் போக்குக்கு இன்னும் இடமுண்டு. இஸ்லாமிய உலகுபற்றித் தெரிந்துகொள்ள நிறையவே உதவும் வெளியீடு.

(31 ☞)

# இந்தோனேஷியாவில் இன்று நடப்பதென்ன?

ஜெயிலானி ரஸ்வி

கடந்த முப்பதாண்டு காலமாக இந்தோனேஷியாவின் ஆட்சி முறை மிகக் கொடூரமானதாக இருந்தது. சனநாயகத்துக்கு அங்கு இடமிருக்க வில்லை. சனநாயக கொள்கைகளை நசுக்கி ஒடுக்கி வந்த ஜனாதிபதி சுகார்தோ இறுதியில் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பை சமாளிக்க முடியாது தமது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார். மக்கள் அவரது ஆட்சிக்கு எதிராக பெரும் போராட்டம் நடாத்தியதை யாவரும் அறிவர்.

1949ஆம் ஆண்டு வரை இந்தோனேஷியா ஹொலன்ட் நாட்டின் அடிமையாக இருந்தது. 1942ஆம் ஆண்டு சுகார்னோவின் தலைமையின் கீழ் நடாத்திய சுதந்திர போராட்டத்தினால் 1949ஆம் ஆண்டு இந்தோனேஷியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. அந்நாட்டு கம்யூனிஸ்ட்டுகள் இச்சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தனர். சுதந்திரத்தின் பின்னர் சுகார்னோ ஆட்சியில் அமர்த்தப்பட்டார். இவரது ஆட்சியின் போது மேற்கத்திய சக்திகளின் தலையீட்டினால் சீனாவுடனும் சோவியத் நாட்டுடனும் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ள இந்தோனேஷியாவுக்கு இயலவில்லை.

1965ஆம் ஆண்டு ஆயுதப் படை தலைவராக இருந்த சுகார்தோ மேற்கொண்ட அரசியல் சதி நடவடிக்கை காரணமாக சுகார்னோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. சுகார்தோ ஆட்சியை கைப்பற்றி கம்யூனிஸ்ட்களுக்கும் தேசாபிமானிகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் மக்கள் கண்ட கண்ட இடமெல்லாம் கொன்று குவிக்கப் பட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி அங்கு தடை செய்யப்பட்டது. இந்தோனேஷியர்களில் ஐந்து இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

1966ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி சுகார்தோ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மாறினார். உலக வங்கியினதும் சர்வதேச நிதி நிறுவனத்தினதும் அங்கீகாரத்தின் படி நீண்ட காலமாக ஆட்சி நடாத்திய சுகார்தோ நாட்டின் பிரதான பொருளாதார வளங்களை தமது வீட்டாருக்கும் நண்பர்களுக்கும், இராணுவத்தின் சில உயர் அதிகாரிகள் மத்தியிலும் பகிர்ந்தளித்தார்.

1977ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் பெரும் பொருளாதார வீழ்ச்சி தலைதூக்கியது. அங்கு ரூபாவின் மதிப்பு வெகு விரைவாக வீழ்ச்சியுற்றது. அதன்படி ஓர் இறாத்தல் பாண் வாங்குவதற்கு பணப்பையையே காலி செய்ய நேர்ந்தது. இந்தோனேஷியாவின் ரூபாவின் மதிப்பு 50% வீதம் குறைந்தது. அமெரிக்க டாலர் ஒன்றுக்கு ரூபியா 14,000 வரை கொடுக்க நேர்ந்தது. இருபது கோடி சனத்தொகையுடைய இந்தோனேஷியாவில் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

இந்தோனேஷியாவில் உள்நாட்டு பொருளாதாரத்தையே தனதாக்கிக் கொண்ட சுகார்தோவும் அவரது பிள்ளைகள் ஆறு பேர் மற்றும் சில இராணுவ உயர் அதிகாரிகளும் அச்சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக சொந்த சுயநலத்திற்காக எண்ணெய் விலை 71% உயர்த்தப்பட்டது. புகையிரத போக்குவரத்துச் செலவு 2 மடங்காக உயர்த்தப்பட்டது. பசளை விலை 12.5% ஆகவும், மின்சாரச் செலவு 60% ஆகவும், அரிசி விலை 38% ஆகவும் அதிகரிக்கப்பட்டது. சமையல் எண்ணெய் விலை 110% ஆகவும் கோழி இறைச்சி விலை 86%, பாலின் விலை 60% ஆகவும் அதிகரிக் கப்பட்டது. பாடசாலை கட்டணமும், பாடசாலை உபகரணங்களின் கட்டணமும் 70% விலை உயர்த்தப் பட்டது. இந்நிலையில் வேலையில்லாப் பிரச்சனை தலைவிரித்தாடியது. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்துக்கும் அதிகமாயிற்று.

இந் நிலைமைகளினால் ஆத்திரமுற்று பொங்கியெழுந்த மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். சுஹார்தோவினது ஆட்சிக்கெதிராக தமது எதிர்ப்பை பகிரங்கமாக தெரிவித்தனர். சுஹார்தோவிற்கும் அவரது வீட்டாருக்கும் சொந்தமான கம்பனி வேலைத் தளங்கள் மற்றும் வணிக ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்குள் புகுந்து கொள்ளையடிக்கவும், நாசகார செயல்களில் ஈடுபடவும் தலைப்பட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் பாராளுமன்றத்துக்குள் சென்று அதனைக் கைப்பற்றினர். இக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர்கள், அமீன்றயிஸ் சுகர்னோவின் மகள் மெகாவதி சுகர்னோவும் அடங்கிய 50 பேர் கொண்ட குழுவாகும்.

ஜனாதிபதி சுஹர்தோ தனது பதவியைத் துறந்து, உப ஜனாதிபதிக்கு அப்பதவியை ஒப்படைத்தார். இச்செயல் ஓர் அநியாயக்காரனிடமிருந்து மற்றோர் அநியாயக்காரனுக்கு பதவி மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. அவரும் அப்பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. போராட்டம் ஓயவில்லை.

வளர்ந்து வரும் உலக நாடுகளுக்கு இந்தோனேஷியாவின் இன்றைய நிகழ்வுகள் சிறந்த பாடமாக அமையும். ▣

சிறுகதை

# வெளிவெளி

நாமகள்

குட்டானுக்கு உடம்பெல்லாம் 'சில்லிட்டுப் போனது போலிருந்தது. ஒவ்வொரு முகிலும் அவனைக் கடந்து போகும் போதெல்லாம் அதிகமாகக் குளிர்ந்தது. ஆனாலும் இறங்கி வருவதற்கு மனமிருக்க வில்லை. இன்னும் அதிக உயரத்திற்குப் போக வேண்டும் போலிருந்தது. உயரே எல்லை தெரியாத வெளி. அவன் தலைக்கு மேலே மேகங்கள். இடப்புறம் வலப்புறம் எங்கும் மேகங்கள். ஓடிக்கொண்டிருக்கின்ற மேகங்களுக் கிடையே எப்போதாவது தெரிகின்ற இடைவெளியில் வானத்தின் நீலம் தெரிந்தது.

குட்டான் தூரத்தே பார்த்தபோது, செந்திலும் குமாரும் மிதப்பது போல் வந்து கொண்டிருந்தார்கள். இருவர் முகத்திலும் சந்தோஷம் தெரிந்தது. ஒரு புதிய அனுபவத்தின் பிரமிப்பு தெரிந்தது.

"ராஜு எங்கயடா?" குட்டான் அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"அவன் அங்க நிக்கிறாண்டா" செந்தில் கையைப் பின்புறமாய்க் காட்டினான்.

"எங்க?"

எங்கேயென்று காட்டுவது? வானம் எல்லை தெரியாத வெளி. ஓடுகின்ற மேகங்களைத் தவிர வேறு எதுவுமற்ற வெளி. செந்தில் கஷ்டப்பட்டான்.

"எங்கயடா ராஜு?" குட்டான் அருகில் வந்து கைகளைப் பிடித்தான். இறுகப் பற்றிக் கொள்ள முடியவில்லை. கைகள் நழுவின.

"இப்பிடியே இன்னும் கொஞ்சம் போனா ராஜு வந்து கொண்டிருப்பான். அவன் பயந்து பயந்து மெதுவாய்த்தான் வாறான்" செந்தில் திரும்பி நின்று கைகளை முன்புறமாய் நீட்டி ஒரு திசையைச் சுட்டிக் காட்டினான்.

"டேய் பயந்தாங்கொள்ளி" குட்டான் கத்தியபடியே செந்தில் காட்டிய திசையில் வேகமாய் மிதந்தான். ராஜுவை நன்றாக 'நக்கல்'டிக்க முடியுமென்று அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

ராஜு பயந்தவன். எல்லாவற்றிற்கும் சற்றுப் பின்னேதான் நிற்பான். குட்டான் அடிக்கடி அவனைக் கேலி செய்வான். விதானையார் வளவில் மாங்காய் பிடுங்கப் போவதென்றால் ராஜு அவர்களோடு சேரமாட்டான். குட்டான் பல தடவைகள் விதானையார் வளவிற்குப் போயிருக்கிறான். வரிசையாய் ஐந்தாறு மாமரங்கள். பெரியதொரு குவியலாக சாணமும் வைக்கோற் போர்கள் சிலவும் மரங்களுக்கருகில் இருந்தன. யாராவது வருகின்ற ஓசை கேட்கும் போது குட்டானும் மற்றவர்களும் இவற்றினிடையேதான் மறைந்து கொள்வார்கள். ஒரு கிழவனைத் தவிர வேறு எவரையும் அந்த வளவில் அவர்கள் கண்டதில்லை. ஒரு முறை மட்டும்தான் குட்டான் அந்தக் கிழவனிடம் பிடிபட்டான். அன்றுதான் கிழவனை மிகவும் அருகில் பார்க்க முடிந்தது. கிழவனைப் பார்க்கப் பயமாக இருந்தது. கிழவன் அவனைக் காதில் பிடித்து இழுத்து வந்தான். அப்படியே பிடித்து வைத்துக் கொண்டே ஏதோ நிறைய ஏசினான். குட்டானுக்கு எதுவுமே விளங்கவில்லை. காது மட்டும் வலித்தது. கிழவனுக்கு ஒன்றிரண்டு பற்களே இருந்தன. நரைத்திருந்த மயிரை குடுமியாக முடிந்திருந்தான். காதில் சிவப்பு நிறத்தில் பெரிய கடுக்கன்கள் இருந்தன. கிழவன் ஏசும்போது தொங்கிய காதோடு அவை முன்னும் பின்னுமாய் ஆடின. குட்டானுக்கு அவன் கேள்வியுற்றிருந்த குனியக்காரர் பற்றிய பயம் மனதில் தலை தூக்கியது. கிழவன் கடைசியில் அவனைப் போகுமாறு தலையில் பிடித்துத் தள்ளினான். குட்டான் தடுமாறி வீழ்ந்து பின்னர் சுதாகரித்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப் போனான். மற்றவர்கள் ஒழுங்கை முடக்கில் காத்திருந்தார்கள். குட்டான் எவரோடும் பேசாமல் வீட்டிற்குப் போனான். மறுநாள் ராஜுவிடம் இதைச் சொல்ல ஆரம்பித்த போதே ராஜு அவனை கேலி செய்ய ஆரம்பித்தான். குட்டான் மேலே எதுவும் சொல்லாமல் நிறுத்திக் கொண்டான்.

அதன் பின்னர் குட்டான் விதானையார் வளவிற்குப் போகவில்லை. அந்த வருட மாங்காய் 'சீசன்' முடிந்து போயிற்று. அடுத்தடுத்த மாதங்களில் அந்தக் கிழவன் செத்துப் போனான். குட்டான் அந்த வளவு இருக்கும் பக்கமாகவே போவதில்லை. அப்படியே போக நேர்ந்தாலும் கண்களை மூடியபடியே ஒரே மூச்சில் ஓடிக் கடந்து விடுவான்.

குட்டான் நெருங்கிப் போனபோது ராஜு மெதுவாய் மிதந்தபடி நின்றான்.

"ஏன் பயந்து பயந்து பின்னுக்கு நிக்கிறாய்" குட்டானின் கேள்வி ராஜுவை வெட்கப்படுத்தியிருக்க வேண்டும். சற்று நேரம் மௌனமாக இருந்தான். "அங்கால நிறையக் குருவியள் இருக்கு. பாக்க ஆசையாய் இருக்கு". ராஜு காட்டிய திசையில் எதுவும் தென்படவில்லை.

"டேய் டேய் கதையளக்காதயடா".

"நம்பாட்டிப் போ". இப்போது ராஜுவிடம் இலேசான கோபம் தலை தூக்கியிருந்தது.

"எங்க காட்டு பாப்பம்" குட்டான் ராஜுவையும் இழுத்துக் கொண்டு வேகமாய் முன்னே பாய்ந்தான். சற்றுத் தூரம் முன்னே செல்ல ஒன்றிரண்டாய் குருவிகள் அவர்களின் குறுக்காகப் பறந்தன. அவற்றின் மெல்லிய படபடப்பு அவர்களைக் கண்டதும் அதிகமானது. கீர்ச்சிட்டபடி விலகிப் பறந்தன. குட்டான் ஒன்றையேனும் தொட முயன்றான். அவை இன்னும் உயரே பறந்தன. மஞ்சள் நிற வயிற்றுப்பாகம் மட்டும் தெரிந்தது. குட்டானுக்கு ஏமாற்றமாக இருந்தது. எப்படியேனும் தொட்டுவிடும் முயற்சியில் மேகங்களுக்குள் ஊடுருவிப் போனான். ராஜுவைத் திகைக்க வைப்பதில் குட்டானுக்கு சந்தோஷமிருந்தது. "அம்புலிமாமா" கதைகளில் படித்திருந்த, வான வீதியில் உலா வரும் கந்தர்வர்கள் தேவர்களுள் ஒருவனாய் தன்னை எண்ணிக் கொண்டான். ஆனாலும் எந்தக் குருவியையும் அவனால் தொட முடியவில்லை.

கீழே தாழ்வான மேகங்களைத் தாண்டி மங்கிய பச்சை நிறத்தில் பூமி தெரிந்தது. இன்னும் சற்றுத் தாழ்ந்து பார்க்கையில் வித விதமான நிறங்களில் பூமியின் அடையாளங்கள் தெரிந்தன. குட்டான் இன்னும் தாழ்வாக மிதந்தான். கீழே தெரிகின்றவற்றை அவனால் வேறுபடுத்திப் பார்க்க முடிந்தது. கறுப்பாய் நீண்டிருந்த தெருக்கள் தெரிந்தன. இரண்டு பக்கமும் வயல்கள் காய்ந்து வெடித்திருந்தன. உடைந்து போயிருந்த வீடுகளும் உடையாத வீடுகளின் கூரைகளும் தென்பட்டன. மனிதர்களை மட்டும் எங்கும் காணமுடியவில்லை. தனித்த ஆடொன்று வேலியோரமாய் நின்று கொண்டிருந்தது.

இன்னும் சற்றுத் தூரம் மிதந்த போது தரவை தெரிந்தது. குட்டானிடம் ஒரு வித மலர்ச்சியுண்டானது. அவனும் நண்பர்களும் அந்தத் தரவையில்தான் விளையாடினார்கள். கண்ணுக்கெட்டிய வரை அது வெளியாகத்தான் இருந்தது. தூரத்தில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பனைகளும் கரும் பச்சையாய் புதர்களும் தெரியும். மழை காலங்களில் கொக்குகளும் நாரைகளும் வந்து போகும். ஏனைய காலங்களில் அவர்கள் மட்டும்தான். பின்னைய நாட்களில் தரவையில் விளையாட முடியாமல் போயிற்று. தரவைக்கு அப்பாலிருந்த சனங்கள் இந்தப் பக்கமாய் வந்து விட்டார்கள். கொஞ்ச நாள் தெருவெங்கும் சனங்கள், களைத்துப் போனவர்களாய் நடந்து போனார்கள். அதன் பின்னர் தரவையின் பக்கமாய் மாடுகளைத் தவிர யாரும் போவதில்லை. அது மனித





நடமாட்டமில்லாத வெளியாய்ப் போயிற்று. அவர்கள் விளையாடிய இடங்களிலும் புதர்களும் பற்றைகளும் வளர்ந்திருக்கக் கூடும். வீட்டின் பின்புற வளவினுள் விளையாடிய நாட்களில் குட்டானுக்கு தரவை பற்றிய ஏக்கம் பெரிதாய் எழும். மீண்டும் அங்கு விளையாடுவது பற்றிய கற்பனைகளுடன் தான் அவன் நாட்களை நகர்த்தியிருந்தான்.

குட்டானுக்கு அப்படியே தனது வீட்டிற்குப் போக வேண்டும் போலிருந்தது. அண்ணாவின் பள்ளிக்கூடத்தைத் தாண்டி அவனுடைய வீடு இருந்தது. அண்ணாவின் பள்ளிக்கூடத்தை அவன் மிகவும் விரும்பினான். அங்கு அழகான புதிய மாடிக்கட்டிடங்கள் இருந்தன. அவனுடையது அரைச் சுவருடன் கூடிய பழைய கட்டிடம். தரையெல்லாம் உடைந்து குழிகளாய் இருக்கும். மேசைக் கால்கள் எப்போதும் ஆடியபடி எரிச்சலூட்டும். அண்ணாவின் பள்ளிக்கூடத்திற்கு போக இருக்கும் நாட்களை அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் அண்ணாவின் பள்ளியில் சேர்ந்த பொழுது அது வேறொரு பள்ளியின் மைதானத்தில் கொட்டில்களுக்குள் இயங்கிக் கொண்டிருந்தது. அண்ணா கடைசி வரையும் வீடு பற்றியும் பள்ளி பற்றியும் கவலைப்பட்டான். எப்போது போவோம் என்று அடிக்கடி கேட்டான். குட்டானுக்கும் வீடு பற்றிய கவலை நிறையவே எழும். அண்ணாவின் மாடிக் கட்டிடங்கள் கொண்ட பள்ளியோடு அவனுக்கு பரிச்சயமில்லை. எனவே அது பற்றி அவன் அவ்வளவாக யோசிப்பதுமில்லை.

குட்டான் வீட்டிற்கு அருகாக வந்து நின்றான். வீடு உடைந்திருக்கவில்லை. சுவர்களில் சன்னங்கள் தெறித்த அடையாளங்கள் ஏராளமாய்த் தெரிந்தன. உள்ளேயும் வெளியேயும் கண்ணாடிகள் உடைந்து சிதறியிருந்தன. முற்றத்திலிருந்த பூமரங்கள் இலையுதிர்த்து காய்ந்து போன தண்டுகள் மட்டுமே எஞ்சியிருந்தன. முற்றம் சருகுகளால் நிறைந்திருந்தது. நிலம் தெரியாத அளவிற்கு சருகுகள் மூடியிருந்தன. நீண்டதும் கடுமையானதுமான வறட்சியினால் இளம் பச்சை இலைகளும் உதிர்ந்து சருகுகளாகியிருந்தன. கண்களின் நீட்சி வரையும் காய்ந்து போன பூமியின் வெறுமை. மழைக்கான அறிகுறிகள் எதுவும் தென்படுவதாயில்லை. வறட்சி இன்னமும் நீளுமாயின் எஞ்சியிருக்கின்ற குருத்துக்களும் உதிர்ந்து விடக்கூடும். குட்டானுக்குக் கவலையாக இருந்தது. மரங்கள் அனைத்தும் அநேகமாக இலைகளை உதிர்த்துத்தானிருந்தன. சருகுகள் காற்றில் அசைகையில் சின்னதாய் கிளம்பிய ஒலி சூழலின் நிசப்தத்தில் மெல்லிய அழுகையாய் அவனுக்குப் பட்டது.

"பாலு" யாரோ தன்னை அழைப்பது போன்ற உணர்வு ஏற்படவே சுற்றிலும் பார்த்துக் கொண்டான். சருகுகளின் சப்தத்தையும் காற்றின் ஓசையையும் தவிர வேறெதுவுமற்ற வெறுமையின் அமைதி. அதுவே சற்றுப் பயமூட்டுவதாயும் இருந்தது.

"பாலு....." மீண்டும் சற்றுப் பெரிதான அழைப்பு. குரலை அடையாளம் கண்டு கொண்ட போது ஆச்சரியமாக இருந்தது. அது அப்பாவின் குரல். அப்பா அவனைப் பெயர் சொல்லி அழுத்தமாய் அமைதியாய் கூப்பிடுவார். அவரால் மட்டுமே அப்படிக் கூப்பிட முடியுமென்று அடிக்கடி குட்டானுக்குத் தோன்றும். குட்டான் என்று எல்லோரும் அவனைக் கேலி செய்த போது அப்பாதான் சமாதானப்படுத்திறுக்கிறார். அப்படி அழைக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் அவன் நிறையவே அழுதிருக்கிறான். பின்னர் அதுவே அவனுக்கு நிலைத்துப் போயிற்று.

வெளியே யாரும் தென்படாததால் குட்டான் வீட்டினுள்ளே நுழைந்தான். வாசலில் விறாந்தையில் சிதறிக் கிடந்த பொருட்களையும் கறுப்பு நிறத்தில் குவியலாகக் கிடந்தவற்றையும் அவதானமாகத் தாண்டி நடந்தான். கதவுகள் விரியத் திறந்து கிடந்தன. அப்பாவின் குரல் வந்த திசையிலிருந்த அறையுள் நுழைந்தான். யன்னலருகே கம்பிகளைப் பிடித்தபடி உடைந்து நொருங்கியிருந்த கண்ணாடித் துண்டுகளின் மேல் அப்பா நின்றிருந்தார். கண்கள் வானத்தை வெறித்தபடியிருந்தன. குட்டானின் தேகம் விறைத்துப் போனது. உடலெங்கும் ஒருவித நடுக்கம் பரவியது. அப்பா சத்தம் கேட்டுத் திரும்பி அவனை நோக்கி வந்தார். கண்ணாடித் துண்டுகளின் மீது இலகுவாக நடந்தார். பாதங்களிலிருந்து இரத்தம் வழிந்து கண்ணாடித் துண்டுகளின் மீது பளபளப்பாக ஓடியது. அப்பாவிடம் வலியின் சாயல் எதுவும் இல்லை.

அப்பா அருகில் நெருங்க நெருங்க குட்டான் தன்னைத் திடமாக்கிக் கொண்டு அசையாமல் நின்றான். அப்பா நெருங்கி வந்து அவனை அணைத்துக் கொண்டார். அவரின் கைகள் குளிர்மையாக இருந்தன. அவரது வயிற்றில் பதிந்திருந்த கன்னமும் குளிர்ந்தது. அப்பா அவனுடைய தலையை வருடியபடியிருந்தார். அவனுக்கு பயம் சற்றே குறைந்திருந்தது. மெதுவாய் விலகி அப்பாவின் கைகளைப் பிடித்தபடி அவரை உற்றுப் பார்த்தான்.

அப்பா முன்பிருந்தது போலவே இருந்தார். பாதங்களிலிருந்து இரத்தம் வழிந்தும் அமைதியாக





இருக்கின்றதைத் தவிர அவரில் எந்த மாற்றமுமில்லை. எல்லோரும் சொன்னது போல 'சிதறிச் செத்துப்' போயிருந்தாலும் அவன் முன்னால் முழுவதுமாய் அவன் கடைசியாகக் கண்டது போலவே இருந்தார். குட்டான் மீண்டும் அப்பா மீது சாய்ந்து கொண்டான். அப்பாவின் வயிறு குளிர்ந்தது. கைகள் வருடிக் கொடுத்தன.

குட்டானுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. அவை மிகவும் அவதியான நாட்களாக இருந்தன. அண்மையிலும் தூரத்திலும் குண்டுகள் வெடிக்கின்ற சத்தங்கள். அவற்றுக்கிடையே சிறிதும் இடைவெளியிருக்கவில்லை. விமானங்கள் மட்டும் இடைவெளி விட்டு விட்டு வந்து போகும். யன்னல் கண்ணாடிகள் இடைவிடாமல் அதிர்ந்து கொண்டிருக்கும். ஓரிரு நாட்களில் அதுவும் இயல்பாய் பழகிப் போயிற்று.

தெருவெங்கும் மூட்டை முடிச்சுக்களுடன் சனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள். கவலையும் கேள்வியும் எல்லா முகங்களிலுமிருந்தன. குட்டானுக்கு முன்பொருமுறை அவ்வாறு புறப்பட்டு வந்த நாட்கள் ஞாபகத்திற்கு வரும். மீண்டும் எங்கு போவதென்பதைப் பற்றி அப்பாவும் யோசிக்க ஆரம்பித்திருந்தார்.

குட்டானுக்கு பள்ளிக்கூடமோ 'ரியூசனோ' இருக்கவில்லை. அந்தக் கொட்டில் பள்ளிக்கூடத்திற்குப் போகாமலிருப்பதென்பது குட்டானைப் பொறுத்தவரை சந்தோஷமான விடயம். ஆனால் நண்பர்களைப் பார்க்க முடியாதிருப்பதையிட்டு அவனுக்கு வருத்தம்தான். அக்காவும் அண்ணாவும் கூட வீட்டிலிருந்தார்கள். அவர்களோடு வீட்டுக்குள்ளேயே விளையாடி அவனுக்கு அலுத்துப் போயிருந்தது. அண்மையில் கேட்கின்ற 'ஷெல்' சத்தங்களுக்கும் விமானங்களுக்கும் பயந்து ஓடுவதும் பதுங்குவதும் கூட ஒரு விளையாட்டுப் போல் ஆகி அதுவும் அலுக்கின்ற கட்டத்தை அடைந்திருந்தது. வேறு வழியில்லாமல் தெருவிற்கு வேடிக்கை பார்க்க வந்து விடுவான்.

ஒரு மாலைப் பொழுதில், அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சனங்கள் பரபரப்பாய் வானத்தைப் பார்த்தபடி சிதறி ஓடினார்கள். அநேகமானவர்கள் வீதியிலே தடுமாறி விழுந்தார்கள். குட்டானும் மேலே பார்த்தான். இரைச்சலோடு விமானங்கள் அவர்களின் பகுதியை நோக்கி தாழ்வாகப் பறந்தன. குட்டான் வீட்டை நோக்கி ஓடினான்.

"அம்மா! வெளியில வாங்கோ. வெளியில வாங்கோ பொம்மர் வந்திட்டுது".

அவனுடைய கத்தலை விமானத்தின் இரைச்சல் அடித்துக் கொண்டு போயிற்று. அவன் தடுமாறி விழுந்தான். அடுத்த கணம் கேட்ட சத்தம் அவனை தரையோடு ஒரு முறை தூக்கிப் போட்டது. கற்களும் மண்ணும் அவன் மீது வீசப்பட்டன. கண்களைத் திறக்க முடியவில்லை. காதுகளில் வலியும் புது விதமான சப்தம் கேட்டது போன்ற உணர்வும் ஏற்பட்டன. அவற்றையும் மீறி அம்மாவின் அலறல் கேட்டது.

ஒரு கணத்துக்குள் அத்தனையும் நிகழ்ந்து முடிந்திருந்தது. அம்மாவிற்கு வெளியில் வருவதற்கான அவகாசம் கிடைக்கவில்லை. அதனால்தான் அவள் இறக்காமல் இருந்தாள். குட்டான் தட்டுத் தடுமாறி எழுந்து வந்த போது அக்காவும் அண்ணாவும் இரத்தமாய்க் கிடந்தார்கள். அப்பாவைக் காணவேயில்லை. குட்டானுக்கு என்னவோ செய்தது. யாரோ அவனைத் தாங்கிக் கொண்டார்கள்.

குட்டான் ஒரேயடியாக அழுதான். யாருக்காக அழுவது என்று தெரியாமல் அழுதான். அம்மா அழுவதற்கும் முடியாமல் விழுந்து கிடந்தாள். குட்டான் அக்காவையும் அண்ணாவையும் தொட்டுத் தொட்டு அழுதான். அப்பாவை வைத்திருந்த பெட்டியை மட்டும் கடைசிவரையும் யாரும் திறக்கவே இல்லை. அப்பா சிதறிப் போனதாகச் சொன்னார்கள். வலது கை மட்டுமே இருந்ததென்று சொன்னார்கள். ஆனால் அப்பா அவன் முன்னால் நிற்கின்றார். அவனை அணைத்திருக்கின்றார். இரண்டு கைகளாலும் வருடிக் கொடுக்கின்றார். அவர்கள் சொன்னதெல்லாம் பொய்யென்று பட்டது.

அம்மாவிடம் ஓடிப்போய் சொல்லத் தோன்றியது. அப்பாவையும் அழைத்துப் போக நினைத்து அவரிடம் கேட்டான். அப்பா, மென்மையாகச் சிரித்து அவனை மட்டும் போகச் சொன்னார். அவனுக்கு மனமில்லாமலிருந்தது. அப்பாவின் அணைப்பும் வருடலும் தேவையாக இருந்தன. அவரை அணைத்துக் கொண்டு கெஞ்சினான். அப்பா அவனைச் சமாதானப்படுத்தினார். அவரின் கண்கள் கலங்கியிருந்தன. குட்டான் வேறு வழியின்றி அப்பாவிடமிருந்து விலகி நடந்து கறுப்புக் குவியல்களைத் தாண்டி வெளியே வந்தான். சருகுகள் இன்னமும் அழுது கொண்டிருந்தன. பின்புறம் திரும்பி அப்பாவைப் பார்த்தான். அப்பாவின் கண்கள் இப்போதும் கலங்கியே இருந்தன.

குட்டான் மீண்டும் உயரே எழுந்து மேகங்களுக்குள் நுழைந்தான். மிதந்தபடி நண்பர்களைத் தேடிப் போனான்.





தூரத்தே ஏதோ இரையத் தொடங்கியிருந்தது. பறவைகள் கலைந்து சிதறி வானமெங்கும் பறந்தன. இரைச்சல் இப்போது நெருங்கி வந்திருந்தது. தெளிவாய் உற்று நோக்கியபோது புள்ளிகளாய் விமானங்கள் தெரிந்தன. திடீரென பெரும் உருவங்களாகி குட்டானை நெருங்கின. அவனைச் சுற்றிலும் விமானங்கள் சீறிக் கொண்டு பறந்தன. அவனுக்கு இப்போது விமானங்கள் என்றாலே பிடிப்பதில்லை. அவற்றின் ஆச்சரியங்கள் எதுவும் அவனைக் கவர்வதில்லை.

விமானங்கள் அவனை உரசுவது போலப் பறந்தன. விதானையார் வளவிலிருந்த கிழவன் சிவப்புக் கடுக்கன்கள் ஆட ஒரு விமானத்தின் மீது அமர்ந்திருந்து குட்டானை நோக்கிக் குண்டுகளை வீசினான். குட்டானுக்குப் பயமாக இருந்தது. அப்பாவிடம் போக எண்ணினான். அவனைச் சுற்றி குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தன. எல்லா விமானங்களும் இறுக்குவனவாய் நெருங்கிக் கொண்டிருந்தன. மரணம் தழுவிக் கொள்ள ஆசையுற்றதாய் குட்டானை நோக்கி வந்து கொண்டிருந்தது. மரணத்தின் அவஸ்தைகளுக்கு அஞ்சியவனாய் "அப்பா" என அலறியபடி அப்பாவிடம் ஓடத் தொடங்கினான்.

* * *


அம்மா பாலுவின் அலறலில் திடுக்கிட்டு விழித்தாள். தன்னருகே நித்திரையாயிருந்தவன் அலறியபடியே எழுந்ததையும் கொட்டில் வாசலில் மறைப்பிற்காக வைத்திருந்த தகரத்தைத் தட்டி விட்டு வெளியே இருளில் ஓடுவதையும் மங்கிப் போயிருந்த விளக்கு வெளிச்சத்தில் எதுவும் புரியாமல் பார்த்தாள்.

"பாலு.... பாலு...." அம்மா அந்தரத்துடன் இருளில் தடுமாறியபடியே வெளியே வந்தாள். அவன் அலறியபடியே இருளினுள் ஓடிக் கொண்டிருந்தான். எதனாலும் அவனைத் தடை செய்ய முடியவில்லை.

வன்னி அம்மாவிற்குப் பரிச்சயமில்லாத இடம். அவர்கள் இருக்கும் இடத்தின் பெயர் கூட அவளுக்கு தெரிந்திருக்கவில்லை. அந்தக் கொட்டிலுக்கு அன்று காலையில்தான் வந்திருந்தார்கள். அவன் ஓடுகின்ற திசையைக் கூட அவளால் கண்டறிய முடியவில்லை. அவனுடைய அலறல் தேய்ந்து போய் அவளுக்குக் கேட்டது. அவன் ஓடுகின்ற காரணம் புரியாத நிலையில் அம்மா தவிப்புடன் அழத் தொடங்கினாள். அவளைச் சுற்றிலும் இருள் மட்டுமே எஞ்சியிருந்தது.

# "எங்களை விடப் புலிகள் குறைவாகப் பெறமாட்டார்கள் என்பது தெரிந்ததே"

## "ஜனநாயக வழிக்கு வந்து 11 வருடங்கள் முடிந்தும் விரக்தியே மிச்சமாக உள்ளது"



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர்

*த. சித்தார்த்தன் பா. உ.* உடனான

**நேருக்கு நேர் சந்திப்பு!**

? 'தனித் தமிழ் ஈழம்' அமைப்போம் என்ற நோக்குடன் தான் ஆயுதபாணிகளாய் இயக்கங்கள் தோன்றின. அந்த இலட்சியத்திலிருந்து அந்நியப்பட்டுப் போய்விட்டவற்றில் புளொட்டும் ஒன்று. இதற்கான காரணங்களைக் கூறுவீர்களா?

1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தந்தான் இதற்குக் காரணம். எல்லா ஆயுத இயக்கங்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அமைதி வழிக்குத் திரும்பின. விடுதலைப் புலிகள் கூட அப்போது இதனை ஏற்றுக் கொண்டுதானிருந்தார்கள். இந்த ஒப்பந்தப்படி, ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஜனநாயக வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியாவின் அழுத்தமும் இலங்கை கொடுத்த உறுதி மொழியுஞ் சேர்ந்து எம்மை ஆயுத அரசியலைக் கைவிடச் செய்தன. விடுதலைப் புலிகள் அங்ஙனம் கைவிடவில்லை.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு ஏற்படும் என்பதை புளொட் அப்போது நம்பியிருக்கவில்லை. ஆனால் இந்தியாவின் அழுத்தங் காரணமாக அங்ஙனம் நம்பும்படி செய்யப்பட்டது. அத்துடன் இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியாக வேண்டும் என்பதில் அப்போது நியாயமிருந்தது. எனவே ஆயுத அரசியலைக் கைவிடத் தீர்மானித்தோம்.

ஆனால் இன்று 11 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் எமது மக்களின் எந்த அபிலாஷைகளுமே தீர்த்து வைக்கப்படவில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமானதே.

? அப்படியாயின் மாற்றுவழி பற்றி ஏதேனுஞ் சிந்திக்கின்றீர்களா?

இல்லை. இப்போதைக்கு அப்படியான சிந்தனை எதுவும் கிடையாது. அரசாங்கத்துக்குத் தொடர்ந்தும் நெருக்கடி கொடுத்து ஜனநாயக வழியில் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிப்போம்.





? இனியும் ஆயுத அரசியலுக்கு அவசியம் உண்டென்று கருதுகிறீர்களா? இல்லையெனில் மிதவாதக் கட்சிகளோடு சேர்ந்து இயங்கத் தங்களால் முடியாதா?

ஆயுதப் போராட்டத்துக்கான காரணங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் ஆயுதமேந்திய இயக்கங்கள் மக்களுடனும் தங்களுக்குள்ளும் நடந்துகொண்ட முறையானது ஆயுதப் போராட்டத்தின் மீதே ஒருவித சலிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது. எந்த இயக்கமாயினும் இத்தவறிலிருந்து விடுபட்டதாக இல்லை. அத்துடன் இயக்கங்கள் யாவுமே போராட்டத்தை மக்கள் மயப்படுத்தத் தவறிவிட்டன.

ஏனையோருடன் ஒன்றுபடுதல் என்ற விடயத்தைப் பொறுத்தளவில் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் எங்களுக்கு அடிப்படைக் கொள்கை ரீதியிலான வேறுபாடென்று எதுவும் இருப்பதாகக் கூறமுடியாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்பதை எல்லாத் தமிழ்க்கட்சிகளும் ஒப்புக் கொண்டவைதானே. எனவே பெரிதான வேறுபாட்டுக்கு இடமில்லை. இருப்பினும், இவை ஒன்றுபடாமல் இருப்பதற்கான முக்கிய காரணம் யாதெனில் ஒவ்வொன்றும் தான்தான் மாபெருங் கட்சி என்ற கற்பனையில் வாழ்வது அல்லது அப்படி ஆகமுடியும் என்று கற்பனை செய்வதேயாகும். இது த. வி. கூட்டணிக்கும் பொருந்தும்.

த. வி. கூ. யின் செயலதிபராக அமிர்தலிங்கம் அவர்கள் இருந்த காலத்தில் போராளிகளான எமது தலைவர் உமா மகேஸ்வரனுடனும் பிரபாகரனுடனும் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார் என்பதை மறைப்பதற்கில்லை. இது இன்றிருக்கும் த.வி.கூ. தலைமைக்குத் தெரியாமல் இருக்கலாம். அதனால்தானோ என்னவோ – ஆயுதமேந்திய– முன்னாள் தீவிரவாத இயக்கங்களைத் தீண்டத்தகாதவையாகக் கருதி த. வி. கூட்டணி செயற்படுகின்றது. அவர்கள் இந்த எண்ணத்தைக் கைவிட்டு உண்மையான ஒற்றுமை முயற்சியில் ஈடுபட முன்வர வேண்டும் என்று விரும்புகின்றோம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஓர் எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தப்பட்டது. வடபகுதி மக்களுக்கான நிவாரண வெட்டை எதிர்த்து நடாத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் எல்லாத் தமிழ் கட்சிகளும் கலந்து கொண்டன. த.வி. கூட்டணியும் எங்களோடு சேர்ந்து இதில் பங்குபற்றியுள்ளது. இது வரவேற்புக்குரியது. இதைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல நாங்கள் எல்லோருமே முன்வர வேண்டும்.

? வன்னி மாவட்டத்திலிருந்து வந்த மக்கள் பிரதிநிதி என்றளவில் உங்களால் சாதிக்க முடிந்தவை என்ன? அதாவது வன்னி மாவட்டத்தைப் பொறுத்தளவில்?

வவுனியா வடக்கு-தெற்கின் எல்லையாக உள்ளது. இதனால் வன்னி மாவட்ட மக்களது பிரச்சனைகள் சற்று வித்தியாசமானவை. நாளாந்தம் ஏராளமான பிரச்சனைகள். தடுப்பு முகாம்கள், சோதனைச் சாவடிகள், அகதிகள் பிரச்சனை இப்படி எத்தனையோ. வன்னி மாவட்ட மக்களின் பிரதிநிதிகள் என்றளவில் மக்களின் அன்றாடப் பிரச்சனையில் எங்களது கூடிய கவனஞ் செல்லுதல் தவிர்க்க முடியாதது.

எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து விட்டோம் என்று கூறுவதற்கில்லை. சக தமிழ்க் கட்சிகள், இராணுவ பிரிகேடியர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் ஆகியோருடன் தொடர்ந்து அடிக்கடி சந்தித்துப் பேசி அகதி முகாம்களில் உள்ளவர்களை விடுவிக்க முயற்சி எடுத்து வருகிறோம். அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் நாங்கள் தினமும் தொடர்பு கொள்கிறோம். இதுவே போதுமென்பதில்லை. முயற்சிகள் எடுத்தபடிதான் இருக்கின்றோம்.

அபிவிருத்தி வேலைகள் என்றால் பெருமைப்படுகின்றோம். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஆகக் குறைந்தது ஒரு கட்டிடமாவது போட்டுக் கொடுத்துள்ளோம். மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். புதிய மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது கட்டி முடிக்கப்படும்போது வடக்கு-கிழக்கின் ஆகப் பெரிய மருத்துவமனையாக இதுவே அமையப் போகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

---

**தற்போதைய யுத்தத்தின் குறிப்பிடத்தக்க பரிமாணம் யாதெனில் சாந்தி-சமாதானத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த பீடாதிபதிகளே இந்த யுத்தத்தில் காட்டிவரும் ஆர்வமாகும். உலகின் எந்தப் பகுதியிலும் இங்ஙனம் மததருமார்கள் யுத்த கோஷமிடுவதில்லை.**

---

இவற்றைவிட முக்கியமாக, இப்போதுதான் முதல் தடவையாக பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் கீழ்- அரசாங்கக் கட்டுப்பாட்டிலில்லாத வன்னிப் பகுதிகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ தடவை வாதிட்டு இதனைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.





இதைவிட, வவுனியாவில் தற்போது சுமார் 12,000 பேர் மட்டுமே அகதிகளாக உள்ளார்கள். இவர்கள் அனைவருமே கொழும்புக்கு வரக் காத்திருப்பவர்கள் என்று சிலர் நினைக்கின்றார்கள். அது உண்மையல்ல. 3,000க்கும் குறைவானவர்களே வடக்கு-கிழக்குக்கு வெளியே வரவிரும்புகிறார்கள். ஏனையோர் வவுனியாவில் தங்கியிருக்கவும் யாழ் செல்லவுமே விரும்புகிறார்கள். இந்த 12,000 பேரும் சுயவிருப்பில் ஓடி வந்தவர்கள் அல்லது நிர்ப்பந்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள். முக்கிய தடையாக இருப்பது கப்பல் போக்குவரத்து இல்லாமையே.

அரசாங்கம் தேவையற்ற சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது உண்மையே. இதனால் ஊழலுக்கு வித்திடப்பட்டுள்ளது. வவுனியாவில் கடமையாற்றவரும் சிலருக்கு 'இந்த அகதிமுகாம்கள் ஓர் ஊக்குவிப்பு அம்சமாக வருமானம் கொடுக்கின்றது' என்ற குற்றச்சாட்டில் உண்மையில்லாமலுமில்லை.

? இயக்கத் தோழர்களது செலவுக்காக அரசாங்கம் அலவன்ஸ் வழங்குகின்றது என்பது உண்மையா?

"எங்கள் இயக்கத் தோழர்களது செலவுக்காக அரசாங்கம் 'அலவன்ஸ்' வழங்குகின்றது" என்று பலர் ஊகிக்கின்றார்கள். இது தவறு. இதில் உண்மையில்லை.

? குறிப்பாக, கிழக்கில் தங்கள் இயக்கத்தவர்கள் இராணுவத்துடன் சேர்ந்து இயங்குவதும் ஒற்றர்களாகச் செயற்படுவதும் பற்றிய பலத்த கண்டனங்கள் குறித்து-?

கிழக்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஒற்றர்களாகச் செயற்பட்டு வந்ததில்லை. கிழக்கில் வவுணதீவு, செங்கலடி - பதுளை வீதியிலுள்ள கறுத்தப் பாலம் ஆகிய இரண்டு எல்லைப் பகுதிகளிலும் எமது இயக்க உறுப்பினர்கள் உள்ளார்கள். இரண்டு நோக்கங்களை நிறைவேற்றவே அவர்கள் அங்கு உள்ளார்கள். இவை இரண்டுமே எல்லைப் பகுதிகள் என்பதால் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரவிரும்பி சோதனைச் சாவடிக்கு வருபவர்களுக்கு தேவையற்ற சிரமங்கள் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்துகிறோம். அத்துடன் புலிகள் இப்பகுதிக்குள் ஊடுருவதைத் தடுப்பதும் எங்கள் கடமையாகின்றது. தாண்டிக்குளத்திலும் இப்படிச் செயற்பட்டோம். இது எமது தற்பாதுகாப்போடு சம்பந்தப்பட்டது. இந்த இரு கடமைகளையும் புரியும்போது நாம் பல தடவைகளில் தாக்கப்பட்டிருக்கிறோம்.

நாங்களாகப் புலிகளுடன் எப்போதும் மோதலுக்குப் போனதில்லை. ஆனால் நாங்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகிறோம். எனவே தற்காப்புக்காகவே இராணுவ நடவடிக்கையிலீடுபடுகின்றோம். இதை எப்படித் தவறென்று கூறமுடியும்? அப்படித் தவறென்று கூறுபவர்கள் புலிகளிடமும் போய் சகோதரப் படுகொலைகளை நிறுத்துமாறு கேட்காதிருப்பதன் காரணமென்ன? உயிர்ப்பயமா? எங்களை மட்டும் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள் என்றால் ஒருவகையில் சந்தோஷமே. ஏனெனில் எங்களைக் கேட்கலாம் என்றாவது மக்களுக்குப் புரிந்திருக்கிறதல்லவா!

**? பத்திரிகைகளது சீற்றம் - பொதுமக்களின் சீற்றமும்தான் - தற்போது தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கித் திரும்பியிருக்கின்றது! இந்தச் சீற்றத்தில் நியாயமுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா? அதற்கு என்ன சொல்கின்றீர்கள்?**

இது தற்போது ஒரு fashion ஆக வந்துவிட்டது. தமிழ்க் கட்சிகளைக் குறைகூறுவதன் மூலம் தங்களைத் தமிழ்த் தேசியவாதிகள் என்று நிரூபிக்கச் சிலர் படாதபாடு படுகின்றனர். எங்களுக்கு வாக்களித்த மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது அன்றாடம் அவர்களோடு பழகும் எங்களுக்குத்தான் தெரியும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எங்களைப் பார்ப்பதாக வைத்துக் கொண்டு கூறினால், ஒன்றை இந்த விமர்சகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது இந்தத் தமிழ்க் கட்சிகள் ஒருகாலகட்டத்தில் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு உயிர்த் தியாகஞ் செய்வதற்கும் தயாராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவைதான். எனவே இவர்களது தேசிய உணர்வென்பது குளுகுளு அறையில் இருந்து கொண்டு எழுதுபவர்கள், விமர்சிப்பவர்களது தேசிய உணர்வினை விட ஒருபோதும் குறைந்து விடப் போவதில்லை. வசதியான இடங்களிலிருந்து கொண்டு 'என்ன செய்தீர்கள்' என்று கேட்பது மிகச் சுலபம். ஆனால் நடைமுறையில் வடக்கு-கிழக்கு மண்ணில் மக்களோடு மக்களாக நின்று நாளாந்தப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் போதுதான் கட்சி அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் அபாயங்களும் சிரமங்களும் தெரியவரும்.

அதேவேளை, இக்கண்டனங்கள் எங்களைச் சோர்வடையாமல் பாதுகாக்கின்றன என்றளவில் பயனுடையவை என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இவை





ஆக்கபூர்வமானவையாக, தவறுகளை நன்னோக்கில் சுட்டிக் காட்டுவனவாக இருக்க வேண்டும். பொதுமக்களின் சீற்றத்தில் நியாயமிருக்கத்தான் செய்கின்றது. இது தொடர்பில் எங்களால் முடிந்த நடவடிக்கைகளை எடுத்தே வருகின்றோம்.

**? 'தீர்வுப் பொதி' பற்றிய தங்களின் நிலைப்பாடு என்ன?**

இந்தத் தீர்வுப் பொதி இதுவரை முன்வைக்கப்பட்டு வந்த பல்வேறு யோசனைகளைவிட முன்னேற்றகரமானது. ஆனால் முக்கிய சில விடயங்களில் இன்னும் தீர்வு யோசனைகள் வெளிவரவில்லை. உ+மாக: அலகு, சபைகளைக் கலைக்கும் அதிகாரம், காணியுரிமைகள், பொலிஸ் அதிகாரம் போன்றவை இன்னும் பேசப்பட வேண்டியவையே.

தமிழ்க் கட்சிகள் ஐந்துஞ் சேர்ந்து திருத்த யோசனைகளை முன்வைத்தோம். இவை பொதியின் இறுதி வடிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரசு இராணுவத் தீர்வை நோக்கிச் செல்வது போலவே தெரிகிறது. யோசனைகளைச் செயற்படுத்துவதில் அரசாங்கம் மிகப் பலவீனமான நிலையிலுள்ளது. அதனால் இன்று தீர்வுப் பொதி back stage க்குத் தள்ளப்பட்டுவிட்டது.

இருப்பினும் தெரிவுக்குழு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம். பேராசிரியர் பீரிஸுடன் தனிப்பட்ட முறையில் தொடர்ந்தும் பேசி வருகின்றோம்.

**? நீங்கள் கருதும் தீர்வில் முஸ்லீம்களின் நிலைப்பாடு என்ன? தென்கிழக்கு தனிஅலகு பற்றிய கருத்து..?**

முஸ்லீம் மக்களின் தனித்துவம் பேணப்படல் வேண்டும். அவர்களது அச்சம் அகற்றப்படல் வேண்டும். அவர்களது அபிலாசைகளை எவருமே மறுக்க முடியாது. நிரந்தரத் தீர்வு என்பதில் அவர்களின் அபிலாசைகளும் உள்ளடங்கியேயாக வேண்டும்.

ஆனால் முஸ்லீம் காங்கிரஸின் நிலைப்பாட்டை ஏற்க முடியாதவர்களாக உள்ளோம். வெளியிலுள்ள முஸ்லீம்கள் பற்றிக் கவலைப்படும் அமைச்சர் அஷ்ரப் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அச்சம் பற்றி என்ன சொல்கிறார்? முஸ்லீம் காங்கிரஸும் த. வி. கூட்டணியும் உடன்பாடு கண்டுவிட்டால் நாட்டின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்றாகாது. தமிழ் - முஸ்லீம் கட்சிகள் யாவும் கலந்து பேசிக் காணுந் தீர்வே நிரந்தரத் தீர்வாக அமையும்.

? தற்போது நடைபெறும் யுத்தத்தின் பரிமாணங்கள்--? இதை நிறுத்த தாங்கள் ஏதாவது முயற்சி மேற்கொண்டிருக்கின்றீர்களா?

தற்போதைய யுத்தத்தின் குறிப்பிடத்தக்க பரிமாணம் யாதெனில் சாந்தி- சமாதானத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த பீடாதிபதிகளே இந்த யுத்தத்தில் காட்டிவரும் ஆர்வமாகும். உலகின் எந்தப் பகுதியிலும் இங்ஙனம் மதகுருமார்கள் யுத்த கோஷமிடுவதில்லை. இந்த யுத்தத்தை நிறுத்துவது சம்பந்தமாகப் பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியும் பலமுறைகள் பேசி வந்திருக்கின்றோம். ஆனால் நாங்கள் கூறி கேட்கும் நிலையில் சம்பந்தப்பட்ட இருதரப்பும் இல்லையென்பதையும் நாம் அறிவோம். எனவே மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

மூன்றாந் தரப்பு யார் என்ற கேள்வி முக்கியம். சம்பந்தப்பட்ட இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாக இருக்க வேண்டும். அத்துடன் இந்தியாவின் நலன்களைப் புறக்கணித்து தீர்வொன்றை முன்வைக்கவும் முடியாது. இருதரப்பு மீதும் அழுத்தம் பிரயோகிக்க வல்லதாகவும் அந்த மூன்றாந்தரப்பு இருக்க வேண்டும்.

? முன்பு ஒரு தடவை நீங்கள் குறிப்பிட்டதாக ஞாபகம்--- 'புலிகளே தனித்த பிரதிநிதிகள்- பேச்சுவார்த்தைக்கு இதை மற்றவர்கள் ஏற்க வேண்டுமாயின் நீங்கள் ஒதுங்கத்தயார் என்று?' --தற்போது என்ன கூறுகிறீர்கள்?

அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஏனெனில் புலிகள் நிச்சயம் எங்களைவிடக் குறையக் கேட்டா பெறப்போகின்றார்கள்? இல்லையே! பின்னர் ஏன் நாங்கள் ஆட்சேபிக்க வேண்டும்?

ஆனால் எங்களுக்குச் சிக்கல் தரும் நிலைமை ஒன்றுள்ளது. இந்த இருதரப்பும் பேசும்போது முஸ்லீம்களின் நிலையென்ன? அஷ்ரப்பும் வரக்கூடாது என்று பிரபாகரன் கூறுவாரா? அப்படியானால் தீர்வு வருமா? நாங்களும் கலந்து கொள்ளத்தான் வேண்டும் என்று வீம்பு பிடித்துத் தீர்வுக்குக் குறுக்கே நிற்க மாட்டோம்! எப்படியோ நல்ல தீர்வு வந்தால் சரிதான்!

? ஒரு மிதவாதக் கட்சியின் மதிப்புக்குரிய தலைவர் ஒருவரின் புதல்வர் என்ற வகையில் - ஆயுத அரசியலில் ஈடுபட்டதையிட்டு எப்போதாவது வருந்த நேர்ந்துள்ளதா?

சிலவேளைகளில் அப்படி வருந்தியிருக்கின்றேன். ஆயுத அரசியலில் ஈடுபட நேர்ந்தபோது இருந்த சூழ்நிலையே வேறு. இன்றைய நிலையை நாம் ஒருபோதும் எதிர்பார்த்திருந்திருக்கவில்லை.





? அவசரகாலநிலை நீடிப்பு விடயத்தில் தங்கள் கட்சி இப்போது எதிர்த்து வாக்களிக்கிறதே. மாற்றத்துக்கு என்ன காரணம்?

அடிப்படைப் பிரச்சனையோடு சேர்த்துப் பார்த்தே எதிர்க்கின்றோமே தவிர- அன்றாடத் தொந்தரவுகளை வைத்தல்ல. தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதை அரசியல் பிரச்சனையாகவே பார்க்கின்றோம். அன்றாடப் பிரச்சனையாக இருந்த அதன் பரிமாணம் மாறிவிட்டது.

இப்போதும் நாம் எதிர்த்து வாக்களிப்பதால் தொந்தரவு குறையப் போவதில்லை. எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதாக எண்ணியதால் எதிர்க்கின்றோம். இதனால் தொகுதி வேலைகளைக் கவனிப்பதில் பின்னடைவை எதிர்நோக்குகின்றோம். ஆனால் ஒட்டுமொத்தத்தில் எல்லாவற்றையும் balance பண்ணிப் பார்த்தே எதிர்த்து வாக்களிக்கும் முடிவை மேற்கொண்டோம்.

? தமிழ் மக்களுக்குத் தாங்கள் திருப்பம் வாயிலாகத் தற்போது கூறவிரும்புவதென்ன?

தற்போதைய நிலை மிக இக்கட்டானது என்று எல்லோருக்குந் தெரியும். தமிழ்க் கட்சிகள் மாத்திரமன்றி இன்று தமிழ் மக்கள் எல்லோரதும் ஒன்றுபட்ட நடவடிக்கை மூலமே கௌரவத்துடன் கூடிய அமைதியான வாழ்வை, சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வேண்டுகின்றேன். ■

7. சஞ்சிகை : (13 ஆம் பக்கத் தொடர்)

**கண்டி இலக்கியச் செய்திமடல்**

மாத இதழ் 10 ஏப்ரல் 1998
ஆசிரியர் : இரா. அ. இராமன்
அன்பளிப்பு : ரூபா 10/=
வெளியீடு :
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13, பூரணவத்தை, கண்டி.

இராமனின் விடாமுயற்சி முதலில் பாராட்டற்குரியது. நல்ல நண்பர்களின் துணையுடன் செயற்படுகின்றார். தானும் நண்பராகி உதவி வருபவர். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் பெயருக்கு அத்தாட்சிப்பத்திரம் இந்தச் செய்திமடல்தான். பல்வேறு இலக்கியச் செய்திகளைத் தாங்கி வருகின்றது. கனமூட்டப்பட வேண்டிய மடல். காரம், மணம் சேர்ந்தால்தானே நாலுபேர் கவனத்தை ஈர்க்கும்.

8. நூல் : **தீவும் தீர்வுகளும்**

ஆசிரியர்:எம். எம். நூறுல் ஹக்
-Diploma in Mass Media
விலை ரூபா 100/=
வெளியீடு : மருதம்,
கலை இலக்கிய வட்டம்,
சாய்ந்தமருது-05.

அமைச்சர் அஷ்ரப்பின் மதிப்புரை, ஆசிரியரின் முகவுரை, ஏ. எம். எம். நஸீரின் பதிப்புரை என்பவை தாங்கிவந்திருக்கும் நூலில் 19 கட்டுரைகள் இடம் பிடித்துள்ளன. இவை காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட பத்திரிகைக் கட்டுரைகளின் தொகுப்பு. பயனுள்ள முயற்சி. என்னதான் பிரமாதமான கட்டுரையானாலும் அது பத்திரிகையில் வந்தவுடன் எளிதில் மறக்கப்பட்டு விடும். அவை தொடர்ந்தும் வாசகர்களை ஆகர்ஷிக்க வேண்டுமானால் தொகுப்பாக நூலுருப்பெற வேண்டும் என்பது நன்றே. இந்நூல் 'திருப்பம்' விமர்சகர் குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த இதழில் திறனாய்வு இடம்பெறும். ■

# தமிழ்த் திரை உலகை தலை நிமிர வைத்தவர்கள்

இந்தியாவில் திரைப்படங்கள் தயாரித்த ஆரம்ப காலகட்டங்களில் அதில் உள்ள முக்கிய பணிகளை எல்லாம் ஆங்கிலேயரே ஏற்று வந்தார்கள். அதாவது, கேமரா, எடிட்டிங் போன்ற டெக்னிக் வேலைகளில் அவர்களே பொறுப்பு ஏற்று இருந்தனர்.

நடிகர்களுக்கு நடிப்புச் சொல்லி கொடுக்கவும் மற்றபடி அந்தந்த மாநிலத்தை சேர்ந்த பழக்கங்களை படங்களில் பிரதிபலிக்கவும் அந்த மாநிலத்தை சேர்ந்தவரால்தான் முடியும் என்பதால் அநேகமாக இயக்குநர்களாக நம்மவர்கள் பொறுப்பு ஏற்றார்கள். எல்லிஸ் ஆர். டங்கன் போன்ற ஒரு சில அயல்நாட்டு இயக்குநர்களும் உண்டு.

அந்தக் காலங்களில் திரைப்படத் தொழில் பற்றி படம் எடுக்க வந்த நம்ம ஊர் முதலாளிகளுக்கு எதுவுமே தெரியாமல் இருந்தது. ஒரு சமயம் படம் சம்பந்தப்பட்ட ஸ்டில் போட்டோகிராபர் பிலிமை டெவலப் செய்து அது உலர்வதற்காக தொங்கவிட்டிருந்த நிலையில் ஒரு பட தயாரிப்பாளர் அது என்ன என்று தொட்டுப் பார்த்திருக்கிறார். அங்கே வந்த போட்டோகிராபர் அந்த தயாரிப்பாளரை மிரட்டுவதற்காக 'ஐயோ எல்லாவற்றையும் வீணடித்து விட்டீர்களே. இனி நான் என்ன செய்வேன்' என்று கூச்சல் போட்டிருக்கிறார்.

உடனே அந்தப் படஅதிபர் அந்த போட்டோகிராபரை கெஞ்சி கூத்தாடி யாரிடமும் இதைச் சொல்லிவிடாதே என்று கேட்டுக் கொண்டதுடன் கணிசமான பணத்தையும் தந்து சரிக்கட்டியிருக்கிறார்.

இதே மாதிரி நமது நாட்டு பாமர மக்களும் ஆரம்ப காலங்களில் திரைப்படங்களை பார்க்கும் பொழுது விஞ்ஞானத்தின் அந்த புதிய கண்டுபிடிப்பை சரியாக விளங்கிக் கொள்ள முடியாமல் ரொம்ப திணறி இருக்கிறார்கள். ஒரு படத்தில் ஐந்தாறு குதிரைகளில் வீரர்கள் வருவதுபோல் ஒரு காட்சி வந்திருக்கிறது. குதிரை வந்த சாலையில் அங்கங்கே மழை பெய்த தண்ணீர் தேங்கி இருந்திருக்கிறது. சற்று தொலைவான காட்சியில் குதிரைகள் வரும்போதே அந்த மழைத்தண்ணீரில் குதிரைகள் காலடிப்பட்டு தண்ணீர் தெறித்து இருக்கிறது. இதை பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர் திடீரென எழுந்து நின்று 'எல்லாரும் விலகி கொள்ளுங்கப்பா! நம் பக்கத்தில் உள்ள தண்ணீரில குதிரைகள் கால்பட்டுதுனா நம்ம மேல தண்ணீர் பட்டுவிடும்' என கூச்சல் போட்டிருக்கிறார்.

இதேபோல் இன்னொரு மனிதர் திரையில் படம் போடுவதை அமைதியாகப் பார்த்துவிட்டு படம் முடிந்ததும் திரைக்கு பின்னால் எட்டிப் பார்த்தவராய் 'ஏய் இங்க ஒருத்தனையும் காணுமேப்பா' என சத்தம் போட்டு இருக்கிறார்.

இந்த திரைப்படங்கள் இந்தியாவிற்கு வந்த பிறகுதான் நமது ஒருமைப்பாட்டுக்கு உதவியாக அநேக விஷயங்களில் இந்திய மக்களை ஒன்று போல உருமாற்ற துவங்கி இருக்கிறது. முக்கியமாக வெவ்வேறு மாநில மக்கள் உடை, பழக்கம், வீடுகள் போன்றவற்றை ஒவ்வொரு மாநிலத்தவரும் புரிய ஆரம்பித்தார்கள். தவிர முதலில் திரைப்படங்கள் இந்தியாவின் முக்கிய மொழிகளில் எடுக்கப்பட்ட பொழுது ஒரே கதையை ஒரே மாதிரி வெவ்வேறு மொழிகளில் எடுத்து இருக்கிறார்கள். அதே மாதிரி வெற்றி அடைந்த பாடல் இசையை எல்லா மொழி பாடல்களிலும் பயன்படுத்தி இருக்கிறார்கள். இன்றுகூட இந்திய மொழி படங்களில் ஒன்றுபோல் எல்லா படங்களிலும் காதல் காட்சிகளும், ஆடல் பாடல் காட்சிகளும், சண்டை காட்சிகளும் அமைகிறது.

அதற்கு இன்னொரு முக்கிய காரணம் இந்தியாவில் எல்லா மொழி படங்களையும் ஆரம்ப காலங்களில் கல்கத்தாவிலும் அப்புறம் பம்பாயிலும் எடுக்க நேர்ந்திருக்கிறது.

அந்த பழங்காலத்தில் ராஜா சான்டோ, ராஜா சந்திரசேகர், எல்லிஸ் ஆர். டங்கன், கே. சுப்பிரமணியம் போன்றவர்கள் இயக்குனராக விளங்கி இருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஸ்டுடியோக்களை கட்ட ஆரம்பித்த புதிதில் சென்னையில் மட்டுமல்லாது சேலம், கோயம்புத்தூரிலும் ஸ்டுடியோக்களை நிர்மாணித்தார்கள். மதுரையிலும் ஒரு ஸ்டுடியோ அமைத்தார்கள். ஆனால் அங்கே அதிகமாக படம் எடுக்கப்படவில்லை. சேலத்தில் கட்டப்பட்ட மாடர்ன் தியேட்டர்ஸார் என்ற ஸ்டுடியோ பங்குதார் முறையில் லண்டனில் படித்து திரும்பிய டி. ஆர். சுந்தரம் அவர்களால் நிர்வகிக்கப்பட்டது.

அங்கே டி. ஆர். சுந்தரம், மனோன்மணி, உத்தமபுத்திரன் போன்ற படங்களை எல்லாம் பிரமாண்டமாக

தயாரித்தார். பி. யு. சின்னப்பா நடித்த அந்த உத்தமபுத்திரன் படம்தான் ஒரு நடிகர் இரட்டை வேடத்தில் நடிக்கிற காட்சியைக் கொண்ட முதல் படமாகும்.

கோவையில் பட்சிராஜா ஸ்டுடியோவை நிர்மாணித்த ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் ஆரியமாலா, ஜெகதலப்பிரதாபன், சிவகவி போன்ற மிகப்பெரிய வெற்றி படங்களை எல்லாம் தயாரித்தார். ஜெகதலப்பிரதாபன் படத்தில் பி. யு. சின்னப்பா ஐந்து பேராக தோன்றி பாட்டுக் கச்சேரி நடத்துகிற மாதிரி காட்சி அமைத்து அனைவரையும் வியக்க வைத்தார். பிற்காலம் திருவிளையாடல் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி பலராக தோன்றி கச்சேரி செய்வது ஜெகதலப்பிரதாபன் படத்தின் காட்சியை பின்பற்றி எடுக்கப்பட்டதே ஆகும்.

தமிழ் திரைப்படங்களில் புகழ்பெற்ற நாவலை திரைப்படமாக எடுத்து பெரும் வெற்றி பெற்றவர்கள் இருவர் மட்டுமே. அந்த காலத்தில் பட்சிராஜா ஸ்ரீராமுலு நாயுடுவும், பிற்காலத்தில் அருட்செல்வர் ஏ. பி. நாகராஜனுமே அவர்கள். ஸ்ரீராமுலு நாயுடு அவ்விதம் தயாரித்ததே எம். ஜி. ஆர். நடித்த புகழ் பெற்ற மலைக் கள்ளன் படமாகும். அதுபோல ஏ. பி. நாகராஜன் இயக்கி பெரும் வெற்றி பெற்ற நாவல் சிவாஜி நடித்து, நம்மை பரவசத்தில் ஆழ்த்திய தில்லானா மோகனாம்பாள் ஆகும்.

சென்னையில் படங்களை எடுத்துக் தரும் வசதியோடு நியுடோன், நெப்டியூன் போன்ற ஸ்டுடியோக்கள் தோன்றி இருந்தாலும் எஸ். எஸ். வாசன் அமைத்த ஜெமினி ஸ்டுடியோ பிரமாண்டமான படங்களைத் தயாரித்துப் பெரும் புகழ் பெற்றது. அரங்குகளில் தீவிர கவனம் செலுத்தி படங்களை தயாரித்து ஜெமினி படங்கள் மக்களை பிரமிக்க வைத்தன. மேலும் தமிழில் பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்ட ஜெமினியின் சந்திரலேகா படம்தான் அகில இந்திய ரீதியில் தமிழ் படங்களுக்கு புதிய மவுசைத் தேடித்தந்த படமாகும். இந்தப் படத்தின் ஒரு பகுதியை கே. ராம்நாத்தும், மற்ற பகுதிகளை எஸ். எஸ். வாசனும் இயக்கி இருந்தார்கள்.

இதுநாள்வரை காரைக்குடியில் கீற்று கொட்டகைகளைப் படபிடிப்பு தளங்களாக வைத்தே ஸ்ரீ வள்ளி, நாம் இருவர் போன்ற அற்புதமான படங்களைத் தயாரித்த ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் சென்னைக்கு தனது ஸ்டுடியோவை மாற்றிய பின்னர் எடுத்த படமே வாழ்க்கை என்ற பெயரில் மிகப் பெரிய வெற்றிப் படமாக அமைந்து அனைவரையும் வியக்க வைத்தது. அதன் பிறகு ஏ. வி. எம். அவர்கள் முக்கிய பங்குதாரராக இருந்து தயாரித்த மிகப் பெரிய பரபரப்பை ஊட்டிய வெற்றி படம்தான் 'பராசக்தி' ஆகும்.





ஏ. வி. எம். அவர்கள் குறிப்பிடும் பொழுது, நான் ஆரம்ப காலத்தில் தயாரித்த 'நாம் இருவர்' படத்தின் வெற்றியைப் பார்த்துவிட்டு இதற்கு மேல் இன்னொரு வெற்றிப் படத்தை நம்மால் தயாரிக்க முடியுமா என எண்ணினேன். ஆனால் அதன் பின் வாழ்க்கை படம் வந்து நாம் இருவரை முந்திவிடும் அளவுக்கு வெற்றி பெற்றபொழுது இதுவே நமக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி! இதனை மிஞ்சி நம்மால் இனிப் படம் எடுக்க முடியாது என எண்ணினேன். ஆனால் 'பராசக்தி' படம் வந்து தமிழகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியபொழுது அந்த வெற்றியில் நானே பிரமித்துப் போனேன்' எனக் குறிப்பிட்டார்.

## பாகவதர் என்ற மாமனிதர்

ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதரைப் பற்றி ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதிய பழம்பெரும் பத்திரிகையாளர் ஒருவர் அக்கட்டுரையின் கடைசிப் பகுதியில் தவறான தகவலை தந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது பாகவதர் தனது கடைசி காலத்தில் சென்னையில் பஸ்சில் கூட்டத்தோடு நின்றபடி பயணம் செய்து வந்ததாக கட்டுரையாளர் குறிப்பிட்டு இருக்கிறார்..

ஆனால் பாகவதரிடம் அவர் காலமாகும் வரை அவர் உபயோகத்திற்கு பிளசர் கார் இருந்தது. அந்த காரை பாகவதர் உபயோகத்திற்காக அளித்திருந்தவர் எங்கள் ஊரான முக்கூடலைச் சேர்ந்த த.பி. சொக்கலால் ராம்சேட் நிறுவனத்தின் உரிமையாளரும் கொடை வள்ளலுமான அரிராம் சேட் அவர்கள்.

முதலில் அரிராம் சேட் ஒரு பியட் காரை பாகவதர் பெயருக்கே மாற்றி அவர் உபயோகத்திற்காகத் தந்திருந்தார். பாகவதர் அந்த காரை பயன்படுத்தி வந்த சமயத்தில் அவருக்கு பணம் தந்திருந்த ஒருவர் அவசரமாக அந்த கடனை கேட்டதால் அந்த காரையே அவரிடம் பாகவதர் ஒப்படைத்து விட்டார். இதை அறிந்ததும் அரிராம் சேட் இன்னொரு பியட் காரை பாகவதருக்கு அனுப்பி வைத்தார். ஆனால் இந்த முறை காரின் உரிமையாளராகத் தன் பெயரை வைத்துக் கொண்டு காரின் உபயோகத்தை மட்டும் பாகவதருக்கு தந்திருந்தார். அந்த கார் பாகவதர் காலமாகும்வரை அவரிடமே இருந்தது. அதன்பின் பாகவதர் குடும்பத்தினர் அந்த காரை திரும்ப அரிராம் சேட்டுக்கே அனுப்பி வைத்தார்கள்.

இப்படி உண்மையிருக்க பாகவதர் சென்னையில் பஸ்சில் பயணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஒருவேளை குறிப்பிட்ட அந்த ஒரு நாள் அந்த கார் ரிப்பேராக இருந்து அதன் காரணமாக பாகவதர் பஸ்சில் சென்றிருப்பாரோ என்று எண்ணுவதற்கும் இடமில்லை.

ஏனெனில் அந்த காலக் கட்டத்தில் பாகவதருக்கு மாதந்தோறும் ஆகிற செலவை உத்தேசித்து அரிராம் சேட் அவருக்கு பாங்க் டிடி. அனுப்பிக் கொண்டிருந்தார். எனவே உபயோகித்து வந்த கார் ரிப்பேர் என்றால் பாகவதர் டாக்சியிலோ, ஆட்டோவிலோ பயணம் செய்ய வாய்ப்பிருந்தது.

பாகவதர் தலைசிறந்த கலைஞர் மட்டுமல்ல. தன்மானம் உள்ள மாமனிதர். எந்த சோதனையிலும் தனிப்பட்ட மனிதர்களை எதிர்பார்த்துக் கொண்டிராதவர் அரிராம் சேட்டிடம் மட்டும் அவருடைய அன்புக்கு கட்டுப்பட்டு இருந்தார்.

பாகவதர் சிறையில் இருந்து வெளிவந்த பின்னர் அவர் தயாரித்த படம் 'ராஜமுக்தி' ஆகும். இந்த படத்திற்கு வசனம் எழுதியவர் பிரபல எழுத்தாளர் புதுமைப்பித்தன். இதில் பாகவதரோடு நடித்தவர்கள் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்., பி. எஸ். வீரப்பா மற்றும் எம். ஜி. ஆர். துணைவி ஜானகியும் நடித்ததாக நினைவு! பி. பானுமதி போன்றவர்கள் எல்லாம் படத்தில் இருந்தார்கள். இருப்பினும் படம் வெற்றி பெறவில்லை.

அந்த காலத்தில் படத்திற்கு அதிக பணம் வாங்கிய பாகவதர் இடையிலே படங்கள் நடிக்க முடியாமல் போனதாலும், 'ராஜமுக்தி' படம் தோல்வியுற்றதாலும் ஏற்பட்ட கடனில் கொடுத்தது போக சுமார் இரண்டு லட்சம் ரூபாய் கடன் கொடுபடாமல் இருந்தது. அந்த காலக்கட்டத்தில்தான் அரிராம் சேட் பாகவதரிடம் 16 வயது இளைஞராக அறிமுகமாகி பழகினார்.

எனவே பாகவதருக்கு ஏற்பட்ட அந்த கடன் ரூபாய் இரண்டு லட்சத்தை தானே பொறுப்பேற்று கொடுத்துவிட அரிராம் சேட் விரும்பினார். அது 1948–49 வருடமாக இருக்கலாம். அந்நாளில் இரண்டு லட்சம் என்பது இன்றைய மதிப்புக்கு இரண்டு கோடி மாதிரி!

அந்த கடனை அரிராம் சேட் கொடுத்துவிட முன்வந்த பொழுது அரிராம் சேட் அன்பில் பாகவதர் மகிழ்ந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'தங்களுக்கு மிகச்சிறிய வயது. இந்நிலையில் எனக்காக ஒரு பெரிய பொறுப்பை தாங்கள் ஏற்பது சரியல்ல' இதைப்பற்றி மற்றவர்கள் தவறாக புரிந்துகொண்டு பேச இடம் தரும்! எனவே அந்த கடனை நானே எப்படியும் அடைத்து விடுகிறேன். தாங்கள் எனக்காக சிரமப்பட வேண்டாம்' எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் பாகவதர் கடைசி காலத்தில் அவரைப்பற்றி கற்பனையாக பலர் பல செய்திகளைப் பேச ஆரம்பிப்பார்கள் என்பதை அரிராம் சேட் உணர்ந்திருந்ததாலோ என்னவோ, பாகவதர் சென்னையிலோ, திருச்சியிலோ





வாழ்வதை அவர் விரும்பவில்லை. தன்னுடனே முக்கூடலில் வந்து அவர் சகல வசதிகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே முக்கூடலில் பாகவதருக்காக ஒரு பங்களா கட்டினார். ஆனால் பாகவதரும் தன்னுடைய இயல்பு படியே முக்கூடலில் வந்து வாழ்வதை பார்க்கலாம் என அன்பான மறுமொழியில் தட்டிக் கழித்து விட்டார்.

எனவே உயர்ந்த உள்ளம் படைத்த பாகவதர் என்ற மகா கலைஞனை இறைவன் நிராதரவாய் விட்டுவிடவில்லை. அன்பினால் பாகவதருக்கு பக்கபலமாக இருக்க ஒரு நல்ல துணைவரை அரிராம் சேட் என்ற பெயரில் இறைவன் அளித்திருந்தார்.

மேலும் பாகவதர் எந்த வழியிலாவது தான் வாழ்ந்து விட வேண்டும் என எண்ணவே இல்லை. அதற்கு உதாரணமாக சில சம்பவங்களை நாம் அவ்வப்போது எழுதி இருக்கிறோம்.

பாகவதர் ஒரு கொலை வழக்கில் சிக்க உயர் வகுப்பினரின் பின்னணி சதியும் ஒரு காரணம் என அறிஞர் அண்ணா போன்றவர் சந்தேகித்தனர். அதன் காரணமாகவே பாகவதர் சிறைப்பட்ட காலத்தில் அவருடன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் சிறைபட்டிருந்ததால் அவர்கள் இருவருடனும் அண்ணா தொடர்பு கொண்டு வந்தார்.

அத்துடன் பாகவதர் வெளியே வந்ததும் அவர் நடிப்பதற்கு ஒரு படம் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகவே அண்ணா சொர்க்க வாசல் திரைக்கதையை தயாராக வைத்திருந்தார். திரைக்கதை மட்டுமில்லாமல் அந்த படத்தை தயாரிக்க ஜூபிடர் சோமு என்ற படஅதிபரையும் தயாராக வைத்திருந்தார். பாகவதர் வெளியே வந்ததும் அவரை அண்ணா சந்தித்து அவருக்காக ஒரு படம் தயாரிக்க இருப்பதைச் சொன்னார். பாகவதர் அண்ணாவின் அன்புக்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொண்டாலும் தன்னுடைய நிலையையும் எடுத்துச் சொன்னார்.

'இதுவரை நான் பக்தி படங்களிலேயே நடித்து விட்டேன். ஆனால் தாங்கள் பகுத்தறிவு சிந்தனைகளைக் கொண்டவர்! கடவுள் நம்பிக்கையை தாங்கள் கேலி புரிந்து ஏதாவது எழுதி இருந்தால், பாகவதர் இப்படியெல்லாம் நடிக்க ஆரம்பித்து விட்டார் எனப் பேசுவார்கள். ஆதலால் என்னை மன்னித்து விடுங்கள்' என பாகவதர் கேட்டுக் கொண்டார்.

அண்ணாவை பொறுத்தவரை தனது எழுத்தை யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதவர். அவருடைய சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகத்தில் ஒரு சமயம் எம். ஜி. ஆரை நடிக்க வைக்க ஏற்பாடு நடந்தது. அண்ணா அவர்கள் அந்நாடகத்தில்

சிவாஜி கதாபாத்திரத்திற்கு பக்கம் பக்கமாக எழுதியிருந்த வசனங்களை எம். ஜி. ஆர். பார்த்து விட்டு, இவ்வளவு வசனங்களை மனப்பாடம் செய்ய எனக்கு கால அவ்காசம் வேண்டும். நான் படங்களிலும் நடிக்க வேண்டியிருப்பதால் கால அவகாசம் கிடைப்பதும் சிரமம். எனவே சிவாஜி கதாபாத்திரத்திற்கு வசனங்களை கொஞ்சம் குறைத்துக் கொண்டால் நான் நடிக்க முயற்சிக்கிறேன் எனக் கூறினார்.

ஆனால் அண்ணாவோ, தன் வசனங்களை குறைத்தால் அந்த கதாபாத்திரத்தின் தன்மை பாதிக்கப்படும் என கருதினார். எனவே வசனத்தை மாற்ற அண்ணா விருப்பப்படவில்லை. இதனாலேயே அந்த நாடகத்தில் எம்.ஜி. ஆர். நடிக்க இசைவு தர முடியாமல் போயிற்று. பின்னர் அப்போது நாடக நடிகராக இருந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அந்த சிவாஜி பாத்திரத்தை ஏற்று நடித்தார் என்பது வேறு விசயம்.

ஆக அண்ணா தான் எழுதியதை மாற்றிக்கொள்ள இணங்குவதில்லை என்ற நிலையில் பாகவதர் மீது அண்ணா வைத்த அன்பின் காரணமாக சொர்க்க வாசல் படத்திற்காகத் தான் எழுதியுள்ள வசனங்களை எல்லாம் பாகவதர் படித்து அதில் ஆட்சேபமாக அவர் குறிப்பிடும் வசனங்களை எல்லாம் நீக்கி விடலாம் என பாகவதருக்காக அண்ணா பெருந்தன்மையோடு இசைவு தந்தார்.

ஆனால் பாகவதருக்கு அதற்கு மேலும் ஒரு தயக்கம் இருந்தது. எனவே அவர் அண்ணாவிடம் பணிவுடன் சொன்னார். 'நான் பேசுகிற வசனங்கள் ஆட்சேபமாக இல்லாவிட்டாலும் மற்ற கதாபாத்திரங்களுக்கு தாங்கள் தந்திருக்கும் வசனங்களில் எனது படத்திற்கு மாறுப்பட்ட வசனங்கள் இருக்குமேயானால் பாகவதர் படத்திலா இப்படி என அதையும் பேசுவார்களே! அதனால் தங்கள் அன்பிற்கு நான் எப்போதும் நன்றிக்கடன் பட்டு இருக்கிறேன். அதே சமயம் தங்கள் கதை வசனத்தில் நான் நடிக்க இயலாமல் இருக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

பாகவதரின் தர்ம சங்கடத்தை அண்ணாவும் புரிந்து கொண்டு அதை ஏற்றுக் கொண்டார்.

எனவே பாகவதர் கடைசி காலங்களில் பொருளாதார ரீதியாக சிரமப்பட்டார் என அரைகுறையாக அவரை தெரிந்து கொண்டு விமர்சிப்பது விவேகம் ஆகாது. பாகவதர் எந்த சிரமத்திலும் தனக்கென உள்ள சில பண்புகளை அவர் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்ததில்லை என்பதை இன்னும் சில நிகழ்ச்சிகள் மூலமும் நாம் எடுத்துக்காட்ட முடியும்.

(வளரும்)

-நன்றி: 'வசந்தம்'





# மறுசீரமைப்புக் கோட்பாடும் கல்விச் செயற்பாடும்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மறுசீரமைப்புக் கோட்பாடு (Restructuring theory) என்பது புதிய தகவல் தொழில் நுட்பங்கள், புவியியல் பிராந்திய ரீதியாகப் பன்முகப்படுத்தல் என்பவற்றால் ஏற்படும் மாற்றங்களைக் கருதுகின்றது; அத்துடன் உற்பத்திச் செய்முறைகளை மறு ஒழுங்கு செய்வதையும் சந்தை – அரசு மற்றும் வீடு–வேலைத்தலம், அரசாங்கம்–தனியார் என்பவற்றுக்கிடையிலுள்ள எல்லைகள் மறைந்து வருவதையும் இக்கோட்பாடு சுட்டிக் காட்டுகின்றது. மறுசீரமைப்பு என்னும் சொல் 1980களில் மேலை நாடுகளில் முக்கியத்துவம் பெற்றதொன்று. இந்நாடுகளில் வேலைத்தலங்களையும் குறிப்பாக கல்வித் துறையையும் திறம்படவும் போட்டியடிப்படையிலும் இயங்கச் செய்ய அவை மறுசீரமைப்புச் செய்யப்படல் வேண்டும் என்ற கருத்து மேலோங்கிற்று. கல்வித் துறை சார்ந்த மறுசீரமைப்பு என்பது, கைத்தொழில் சமூகங்கள் கைத்தொழில் மயத்துக்குப் பிந்திய சமூகங்களாக மாறும்போது (postindustrial society) கல்விமுறை புதுவகையான அமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும்; புதுவகையான கல்வியும் பயிற்சியும் இடம்பெற வேண்டும் என்பதைக் கருதுகின்றது. மறுசீரமைப்பு பற்றிய சிந்தனைகளும் அறிக்கைகளும் பின்வரும் விடயங்களை வலியுறுத்தின:

- சுயமாக நிர்வாகம் செய்யப்படும் பாடசாலைகள்
- கைத்தொழில் மயத்துக்குப் பிற்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ப நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்தல்
- தொழில் ரீதியான சுயாதீனத்தை மேம்படுத்தல்
- கோஷ்டியாகப் பணிபுரிதல், உள்நிலை/உள்ளூர் மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளல்.

இவ்வகையில் கல்வித்துறை மறுசீரமைப்பு, பாடசாலைகளின் அமைப்பு (organisation), பாட ஏற்பாடு, கற்பித்தல் முறை என்பவற்றில் மாற்றங்களை வலியுறுத்துகின்றது; வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடு, தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறை என்பவற்றில் மாற்றங்கள்,

பாடசாலை மைய முகாமைத்துவம் நோக்கிய மாற்றங்கள் என இவை விரிந்து செல்லுகின்றன; மேலும் ஆசிரியர்களுடைய வேலைச் சூழலில் மாற்றங்கள், ஆசிரியர்-அதிபர்களுக்கிடையிலான தொடர்புகளில் மாற்றங்கள், பாட ஏற்பாடு, மதிப்பீட்டு முறைகளில் மாற்றங்கள், புதிய தொழில் நுட்பங்களின் காரணமாக, கற்றல் பாணி, முகாமைத்துவம் என்பவற்றில் மாற்றங்கள் ஆகியனவும் இவற்றில் அடங்கும். இவ்வாறான முறையில் கல்வி முறை மறுசீரமைக்கப்படும் போது ஆசிரியர்-மாணவர் என்போருக்கிடையேயான சமூக தொடர்புகளும் மாற்றமுறுகின்றன.

உலகளாவிய ரீதியில் கல்வித்துறையில் நிகழ்ந்துவரும் மறுசீரமைப்பின் அம்சங்களாவன:

–அரசாங்கங்கள் கல்விச் செலவுகளை வழங்கும் நிலை நீங்கி தனியாட்களே அவற்றை ஏற்றல்

–கல்வி நிர்வாகத்தில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல்

–கல்விச் செயற்பாடு தொழில் மயமாக்கப்படல்

–அரசாங்கத்துறை முக்கியத்துவம் குறைந்து சிறிய அமைப்பாதல்

–உள்ளூர் மட்டங்கள் மத்திய அரசுக்குப் பொறுப்புக் கூறல்

–சந்தை மயப்படுத்தலும் தனியார் மயமும்.

இவ்வாறான உலகளாவிய போக்குகள் ஒவ்வொரு நாட்டின் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய முறையில் கல்வித்துறை மறுசீராக்கத்தை நடைமுறைப்படுத்தப் பல நிர்வாக வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் கல்விச் செலவுக் குறைப்பு (downsizing) இதில் முக்கியமானது. மொத்த தேசிய உற்பத்தியில் கல்விச் செலவின் வீதம் தற்போது குறைந்து வருகிறது. அவுஸ்திரேலிய விக்டோரியா மாகாணத்தில் 20 வீதமான ஆசிரியர்கள் வேலையை இழக்க நேரிட்டது; 600 பாடசாலைகள் மூடப்பட்டன; வேலை இழந்தவர்களில் (8000 பேர்) பெரும்பாலானவர்கள் பெண்களாவர். பாடசாலைகள் நிதிவளத்துக்கு உள்ளூர் சமூகங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. பெற்றோர்கள் சுயவிருப்பின் பேரில் அதிக நிதியை வழங்க வேண்டியுள்ளது.

இரண்டாவதாக, அதிகாரப் பகிர்வு வழிமுறையினூடாகப் பாடசாலை அதிபருக்கு பாடசாலை விவகாரங்களில் – ஆசிரியர் தெரிவு, பதவி உயர்வு, பணி ஒதுக்கீடு – கூடிய அதிகாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலை நாடுகளில்





பாடசாலை மாணவர் தொகை குறைந்து வருவதுடன் வழங்கப்படும் நிதி உதவியும் குறைக்கப்பட்டு வருவதால், பாடசாலைகள் மாணவர்களைப் பெறுவதில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்து, இப்பாடசாலைகள் முழுநேர ஆசிரியர்களை வைத்திருக்கும் முறையைக் கைவிட்டுப் பகுதிநேர ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து வருகின்றன. மேலைநாடுகளில் இவ்வொப்பந்த ஆசிரியர்களின் விதாசாரம் 30க்கு உயர்ந்து விட்டது.

மேலும், கல்வி மறுசீரமைப்பின் மற்றொரு கட்டமாக சமூக நீதியை ஏற்படுத்துவதற்கான விசேட ஏற்பாடுகள் நீக்கப்பட்டு, அவை யாவும் பொது அமைப்புடன் இணைக்கப்பட்டு விட்டன. பாடசாலை அதிபர்களே இப்பொறுப்பையும் ஏற்க வேண்டியுள்ளது. விசேட ஏற்பாடுகள், பொது ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்டு விட்டதால், உதாரணமாகப் பெண்களுக்கான விசேட ஏற்பாடுகள் வலுவிழந்து விட்டன.

மேலைநாட்டுக் கல்வி முறைகளில் காணப்படும் இத்தகைய போக்குகள் தவிர்க்க முடியாத வகையில் ஆசிய, ஆபிரிக்க வளர்முக நாடுகளில் அண்மைக் காலங்களில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. ஆனால் இந்நாடுகளின் கொள்கை வகுப்போரின் தீர்மானங்களின்படியன்றி வெளிநாட்டு நிதிநிறுவனங்களின் நிர்ப்பந்தங்களின் காரணமாகவே விரும்பியோ விரும்பாமலோ வளர்முக நாடுகள் இக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளன.

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்குக் கடன்பட்டுள்ள மூன்றாவது உலக வளர்முக நாடுகள் தமது ஏற்றுமதி வருமானத்தில் 20–50 சதவீதத்தைக், கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்துகின்றன. இந்நாடுகள் கடனைத் திருப்பித் தரத் தவறும் போது கடன் வழங்கிய நாடுகளின் பலம் ஓங்குகின்றது. அவை பல புதிய நிபந்தனைகளை விதிக்க முற்படுகின்றன. கடனைத் திருப்பித் தராத நாடுகள் மீண்டும் கடன்களைப் பெறமுடியாத நிலை தோன்றுகின்றது. இதன் விளைவாகச் செல்வந்த நாடுகள் பல 'அமைப்புச் சீராக்க' நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றன. கடன்பட்டுள்ள வளர்முக நாடுகள் இந்நடவடிக்கைகளை ஏற்காதவிடத்து சர்வதேச நிதி நிறுவனங்களும் வளர்ச்சியடைந்த நாடுகளும் தொடர்ந்து கடன் வழங்குவதை நிறுத்தி விடும் நிலையே இன்று எழுந்துள்ளது.

அமைப்புச் சீராக்க நடவடிக்கைகள் முக்கியமாக அரசாங்க செலவினங்களைக் குறைக்குமாறும் அரசாங்க மானியங்களை நீக்குமாறும் கோருகின்றன. சம்பளங்கள், அரசாங்கத்துறை வேலைவாய்ப்பு போன்றவற்றில் அதிகரிப்பு ஏற்படுவதை இக்கொள்கை தடை செய்கின்றது. அரசாங்கத்துறை திறமையுடன் செயற்பட வேண்டும்; அத்துறையின் பல்வேறு தொழிற்பாடுகளைத் தனியார் துறையினர் மேற்கொள்ள வேண்டும்; வெளிநாட்டு மூலதனத்துக்கு இடமளிக்கப்படல் வேண்டும்; உள்ளூர் கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு நீக்கப்படல் வேண்டும்; இவை யாவும் அமைப்புச் சீராக்கத்தின் சில அம்சங்களாகும்.

இந்நடவடிக்கைகளின் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் வருமானப் பாங்குகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளும் அரசாங்கச் சேவைச் சம்பளங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இதற்குக் காரணங்களாகும். வளர்முக நாடுகளின் கடன் நெருக்கடியும் தொடர்ந்து வந்த சீராக்கக் கொள்கைகளும் அரசாங்கங்களையும் அவற்றின் பொருளாதார நிறுவனங்களை மட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகளில் வாழும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரங்களையும் பெரிதும் பாதித்துள்ளன. இந்நடவடிக்கைகள் அரசாங்கங்கள் சாதாரண மக்களுக்கு வழங்கும் சமூக மற்றும் கல்விச் சேவைகளைப் பாதிக்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் கல்வியை வழங்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது; கல்விச் செலவினங்களை அரசாங்கங்களே ஏற்றுக் கொள்கின்றன. நவீன அரசாங்கங்களினதும் அபிவிருத்தியினதும் முக்கிய தேவை கல்வித் தேர்ச்சியைக் கொண்ட மக்கள் தொகையை உருவாக்குவதாகும். இதன் காரணமாகவே இவ்வரசாங்கங்கள் கல்வித் துறையில் ஏராளமான முதலீட்டைச் செய்துள்ளன. இன்று வளர்முக நாடுகளில் வாழும் மக்கள் மத்தியில் கல்வி ஆர்வம் பெருகிக் காணப்படுகின்றது. கல்வியினூடாகப் பிள்ளைகளும் குடும்பங்களும் சமுதாயங்களும் புதிய வாழ்க்கை அந்தஸ்துகளை எட்டமுடியும் என்று மக்கள் நம்பத் தொடங்கினர். இன்றைய மூன்றாம் உலக நாடுகளில் தனியாளின் கல்வித் தகுதிகளே அவனுடைய தொழில் மற்றும் சமூக அந்தஸ்தை நிர்ணயித்து வருகின்றன. இதனால் மக்கள் அதிக கல்வி வாய்ப்புகளைக் கோருகின்றனர். அவற்றை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு என்பதே வளர்முக நாடுகளில் நிலவும்





மக்கள் கருத்தாகும். இதன் காரணமாகவே வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் கல்வித் துறையில் அதிக முதலீட்டைச் செய்து வருகின்றன. இவ்வரசாங்கங்களைப் பொறுத்தவரையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை விட ஏராளமான பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவது இலகுவானது; மேலும் கல்வி என்ற ஒரு தனிப்பட்ட சமூக நிறுவனத்தை அரசாங்கம் அபிவிருத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதும் இலகுவானது. கல்வி, வேலைவாய்ப்புகளுடனும் தொழில் அந்தஸ்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையால் சமூக நகர்வுக்கான (social mobility) பிரதான கருவியாகவும் விளங்குகின்றது.

கல்வித் துறையில் அரசாங்கங்கள் தலையிட்டமையால் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டது. 1950–1970 காலப் பகுதியில் மூன்றாம் உலக நாடுகளில் ஆரம்பப் பள்ளி மாணவர் தொகை மும்மடங்காக அதிகரித்தது; இடைநிலைக் கல்வி மாணவர் தொகை ஏழு மடங்காகவும் உயர்கல்வி மாணவர்களின் தொகை ஆறு மடங்காகவும் அதிகரித்தது. கல்வியின் இத்தகைய பாரிய விரிவு மக்களின் பொருளாதார நிலைமைகளிலும் வாழ்க்கை அந்தஸ்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், அரசாங்கங்களின் கல்வி வாய்ப்புகளை விரிவாக்கும் சனநாயகப்படுத்தற் செயற்பாடுகளினால் பயனடையாத பின்தங்கிய பல பிரிவினர்கள் வளர்முக நாடுகளில் உள்ளனர்:

– இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் வாழும் பெண்கள்.

– இந்தியாவில் வாழும் பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்த மக்கள் (scheduled castes).

– கஷ்டப் பிரதேசங்களில் வாழும் கிராமிய மக்கள்.

– இலங்கையில் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சேரி வாழ் மக்கள் என இவர்களை வகைப்படுத்த முடியும். மேலும் வளர்முக நாடுகளைச் சேர்ந்த ஒரு கோடி ஆரம்பப் பள்ளி வயதெல்லை மாணவர்கள் இன்று பாடசாலை வசதிகளைப் பெற்றிருக்கவில்லை.

வளர்முக நாடுகளில் கல்வித்துறையில் தற்போது பின்தங்கிய நிலையில் உள்ள பிரிவினர்களின் கல்விப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் துரிதமான அரசாங்க நடவடிக்கை தேவைப்படுகின்றது. இப்பிரிவினர்களுக்குக் கல்வி வழங்குகின்ற ஆற்றலும் நிதி வளங்களும் அரசாங்கங்களுக்கே உண்டு. கடந்த காலங்களிலும் தற்போதும் பாடசாலை

செல்லாது இடையில் விலகும் (school dropouts) மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான திறந்த பாடசாலைகள், முறைசாராக் கல்வி ஏற்பாடுகள் மற்றும் எழுத்தறிவு மையங்கள் (alternative schooling- open schools, non - formal education, literacy centres) போன்றனவற்றை ஏற்படுத்தத் தகுதி வாய்ந்த அதிகார பீடம் அரசாங்கங்களேயாகும். இந்நிலையில், 'அமைப்புச் சீராக்க' நடவடிக்கைகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் கல்வி மானியங்களையும் உதவு தொகைகளையும் குறைக்கும் போது இப்பின்தங்கிய பிரிவினர் பல பாரதூரமான கல்விப் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும்.

கடன் பழு மிகுதியாக உள்ள நாடுகள் வேறு வழியின்றி 'அமைப்புச் சீராக்கக்' கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இந்நாடுகள் தனியார் மயத்தில் ஈடுபடவும் கல்விச் செலவினங்களைப் பொதுமக்களிடமிருந்து கட்டணங்களாகத் திரும்பப் பெறவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் கல்வி, வீட்டுவசதி, சுகாதாரம், போக்குவரத்து, நீர்விநியோகம் போன்ற துறைகளில் ஈடுபாடு செலுத்தத் தவறும்போது, அரசாங்கச் செலவில் தங்கியிருக்கும் பின்தங்கிய பிரிவினர்களின் வாழ்க்கைத் தரம் பெரிதும் குறைய நேரிடுகின்றது. இப்பிரிவினரின் வறுமை, பிணி பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்படும் போது அவர்களுடைய கல்வி நிலை பற்றிய அக்கறை குறைகின்றது.

கல்விச் செலவுகளைப் பெற்றோர்தான் தாங்க வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது கூட உயர் மத்திய வகுப்பினர் தமது பிள்ளைகளைக் கல்வியில் ஈடுபடுத்தவே தொடர்ந்து முயற்சி செய்வர். ஆயினும் பின்தங்கிய வகுப்பினர்கள் இந்நிலையில் கல்விக்குக் குறைந்த முக்கியத்துவமே வழங்குவர்.

கல்வி வாய்ப்புகளை வழங்குவது அரசியல் ரீதியாக நன்மையானது எனக் கருதும் வளர்முக நாடுகளின் அரசுகள் கல்விச் செலவுகளைக் குறைப்பதை விடுத்து சுகாதாரச் செலவுகளையே குறைக்க முற்படுகின்றன. ஆனால் இலத்தீன் அமெரிக்க நாடுகள் கல்விச் செலவுகளைக் குறைத்து சுகாதார சேவைகளைத் தரமாகப் பேண விரும்பின. 1980களில் பிலிப்பைன்ஸ், ஜமெய்க்கா முதலிய நாடுகள் கல்விச் செலவில் 40 வீதத்தைக் குறைத்தன. இலத்தீன் அமெரிக்காவிலும் ஆபிரிக்க சகராப் பிரதேச நாடுகளிலும் கல்விச்

33772





செலவு குறைக்கப்பட்டதன் காரணமாக ஆரம்பக் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டது. அரசாங்கங்கள் சாதனங்களையும் கருவிகளையும் வழங்குவதை நிறுத்தின; ஆசிரியர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டன; சம்பளங்களும் ஒழுங்காக மாதாமாதம் வழங்கப்படவில்லை; அவர்களுடைய வேலைச் சூழ்நிலைகளும் சீர்கேடடைந்தன; பாட நூல்கள் மற்றும் துணைச் சாதனங்கள் எவையும் வழங்கப்படவில்லை; ஆசிரியர்களின் கடன் பளுவும் அதிகரித்தது; இந்நிலையில் பல வளர்முக நாடுகளில் ஆசிரியர்களின் அந்தஸ்தும் சீர்கேடடைந்தது.

இப்பின்னணியில், பல ஆபிரிக்க நாடுகளில் சமுதாயங்கள் கல்விச் செலவைப் பொறுப்பேற்கப் பழகிவிட்டன. பெற்றோர்களே கல்விச் செலவை இறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியப் பெற்றோர்களும் கணிசமான அளவு கல்விச் செலவை ஏற்று வருகின்றனர்.

கடன் பிரச்சனைகளை எதிர்நோக்கும் வளர்முக நாடுகள் தமது கல்வி முறைகளின் இலக்குகளில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகி உள்ளனர். கல்வி வாய்ப்புகளை சமத்துவப்படுத்தும் நோக்கம் முக்கியத்துவமிழந்து பொருளாதார நோக்கில் கல்வி முறையின் வினைத்திறனை (efficiency) அதிகரித்தல், பொருளாதார முறைக்குப் பொருத்தமான பாட ஏற்பாட்டை உருவாக்குதல் போன்ற சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டன. அண்மைக் காலங்களில் சர்வதேசிய ரீதியான கல்விச் சீர்திருத்தங்கள் யாவும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதி (IMF) போன்ற நிதி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை காலமும் பிள்ளைகளின் பல்வேறு விருத்திகளைக் கல்வியினூடாக ஏற்படுத்தும் நோக்கை வலியுறுத்திய கல்வியாளர்கள், சமூகவியலாளர்கள் ஆகியோரின் சித்தாந்தங்கள் செல்வாக்கிழந்து விட்டன. பொருளியலாளரின் சிந்தனைகளே கல்விச் செயற்பாட்டில் இன்று ஆக்கிரமிப்புச் செலுத்துகின்றன.

கல்வித்துறையில் அமைப்புச் சீராக்கம் தொடர்பான உலக வங்கியின் கொள்கை, கல்வித்துறையின் செயற்றிறனை அதிகரிப்பதையும் குறைந்த பாடசாலை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் வலியுறுத்தியது. மேலும், அரசாங்கத்தின் கல்வித்துறை மானியங்கள்– இலவசக் கல்வி போன்றன– செல்வந்தர் வகுப்பினரைச் சென்றடைவதை

நிறுத்தி அவர்கள் கல்விக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இலங்கையின் கல்விக் கொள்கை பற்றிய ஆய்வாளர்கள், அமைப்புச் சீராக்கக் கொள்கையினால் கல்வி முறையில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி விளக்கியுள்ளனர். 'இக் கொள்கையினால் கல்வித் தராதரங்கள் வீழ்ச்சியடைந்து விட்டன. குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து விட்டபடியால் அவர்கள் கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. . . . வருமான வேறுபாடுகள் விரிவடைந்து வருகின்றன. . . ஒரு காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட சமத்துவக் கோட்பாடுகள் கல்வித் துறையில் கைவிடப்பட்டு, குறுங்காலப் பொருளாதாரத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது' எனக் கல்வியாளர்களான சுவர்ண ஜயவீர, சந்திரா குணவர்தனா ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது உலக நாடுகள் அமைப்புச் சீராக்கக் கொள்கையினால் கல்வித்துறையில் பிரச்சனைகளை எதிர்நோக்கும் பின்தங்கிய பிரிவினரின் மேம்பாட்டுக்குப் புதிய கொள்கைகளை வகுக்க வேண்டியுள்ளது. இலங்கையில் கல்விச் செலவு மொத்த தேசிய உற்பத்தியில் 4.6 வீதமாக (1965) இருந்து 2.3 வீதமாகக் குறைந்துள்ள (1985) நிலையில் இப்பிரிவினர்களே பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கல்வி வாய்ப்புகளை விரிவு செய்வதில் அக்கறை குறைந்துள்ளமையால் அண்மைக் காலங்களில் குழந்தைத் தொழிலாளர்கள், தெருவில் அலையும் பிள்ளைகள், பிள்ளைகள் துஷ்பிரயோகம், பாடசாலை செல்லாத பிள்ளைகள் போன்ற பிரச்சனைகள் சேரிப்புறங்களிலும் பெருந்தோட்டப்புறங்களிலும் அதிகரித்து வருகிறது. எழுத்தறிவின் வளர்ச்சியும் தேக்கமடைந்துள்ளது. (1981இல் 86.5%, 1991இல் 86.9%, 1994இல் 90.1%); 5-14 வயதுப் பிள்ளைகளின் பாடசாலைச் சேர்வு வீதமும் பெரிய அளவில் அதிகரிக்கவில்லை (1981இல் 83.7%, 1991இல் 87.9%); 15-19 வயதுப் பிள்ளைகளின் சேர்வு வீதம் கடந்த மூன்று தசாப்தங்களாக 40 வீதத்தைத் தாண்டவில்லை. ஆசிய நாடுகளில் எழுத்தறிவு வீதம், மாணவர் சேர்வு வீதம் என்பவற்றில் இலங்கை வகித்த முதன்மையிடம் தற்போது இழக்கப்பட்டு விட்டது. அமைப்புச் சீராக்கத்தின் பாதகமான விளைவுகளை இலங்கை ஏற்கனவே அனுபவித்து வருகின்றது.

▣





# எழுத்தும் வாழ்வும் ஒரே பாதையிலா?

## எழுத்தாளரின் சொந்த வாழ்வு விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதா?

நரகத்துமுள்ளு

எழுத்தாளர் ஒருவரது ஆக்கங்கள் யாவும் அவரது ஆத்மாவினின்றும் அந்நியப்படாததாக அமைந்திடல் வேண்டுமா? தன்னுடைய படைப்புகளின் மூலம் அவர் யாருக்கு எதைச் சொல்ல விழைகின்றார்? உள்ளதை உள்ளபடி விபரிப்பதே அவர் பணி. பிரச்சாரமெதையும் அவர் மேற்கொள்ள வேண்டுமென்பதில்லை எனச் சிலர் இப்போது வாதிடுகின்றனர்.

நாம் எத்தனையோ எழுத்தாளர்களைச் சந்தித்திருப்போம். அவர்களது பல்வேறு ஆக்கங்களையும் படித்திருப்போம். அவர்களில் சிலரது தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும் எமக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் அவர்களது எழுத்துக்கும் அவர்களது சொந்த வாழ்வுக்கும் ஏதாவது சம்பந்தம் இருத்தல் வேண்டுமா? அல்லது இது முற்றிலும் வெவ்வேறான இரு விடயங்களா? அண்மையில் இப்படியான சர்ச்சைகள் ஆங்காங்கே எழுந்து வருகின்றன.

சாத்தான் 'வேதம் ஓதலாமா? என்ற பழைய கேள்விதான் இது என்று இந்தச் சர்ச்சையைப் புறக்கணிப்பது நியாயமானதல்ல. யார் சொல்கிறார் என்பது முக்கியமா? என்ன சொல்கிறார் என்பது முக்கியமா? இது 'ஒரு பரந்துபட்ட விடயப்பரப்புக்கு ஏற்புடைய விவாதமாயினும் எமது விவாதத்தை குறிப்பிட்ட ஒரு வகைக்கென்று குறுக்கிட வேண்டியிருக்கின்றது. அதனால்தான் எழுத்தாளரது வாழ்வு என்ற சிறுவட்டத்துக்குள் விவாதத்தைத் தொடங்குவோம்.

படைப்பாளி என்பது யாரைச் சுட்டுகிறது? சமூகத்தைப் பொறுத்தளவில் எழுத்தாளர் ஏற்படுத்தும் தாக்கந்தான் (impact) என்ன? தாக்கமேற்படுத்துபவர் எல்லோருமே படைப்பாளியாகிவிட முடியுமா? நடிகர், வசனகர்த்தா, கவிஞர், பாடகர், நாட்டியக் கலைஞர், இசைஞர், சிற்பி, கைவினைஞர்கள், செய்தி எழுதுபவர், கேலிச் சித்திரம் வரைபவர்

என யாவருமே படைப்பாளிகள் இல்லையா? அப்படியாயின் அவர்களது படைப்புகளுக்கும் சொந்த வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆராய வேண்டுமா என்றும் வினாக்கள் தொடுக்கப்படலாம்.

தன்னிடமுள்ள ஏதோவொன்றை வெளிக்கொணர்ந்து பரவவிட்டு அதன் மூலம் சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதில் ஆக்க இலக்கியகாரர்களே முக்கியமானவர்கள் என்றளவில் எழுத்தாளர், கவிஞர் என்போரது படைப்புக்களையும் அவர்தம் சொந்த வாழ்வின் நிகழ்வுகளையும் தொடர்புறுத்திப் பார்ப்பதாகவே எனது இக்கட்டுரை அமைகின்றது.

எல்லாவற்றிலும் ஊடுருவி இன்று அரசியல்வாதி முதல் கலை, இலக்கியகாரர் வரை நன்கு பரிச்சயமாகிவிட்ட Escapism த்தை எட்ட வைத்துவிட்டு இதனை எழுதுகிறேன். இதற்கான மாற்றுக் கருத்துக்கள் நிறையவே வரப்போகின்றன என்பதும் அவற்றுக்கும் 'திருப்பத்தில்' இடமிருக்கும் என்பதையும் உறுதிப்படுத்திய பின்னரே எழுதத் துணிந்தேன்.

## உள்ளதும் நல்லதும்

உள்ளதை உள்ளபடி எவருமே சொல்லலாம். அதனைச் சொல்பவருக்கு ஒரு தகுதி– விசேட தகுதியை யாரும் தேவைப்படுத்த முடியாது. ஆனால் அதைச் சொல்வதன் நோக்கமென்று ஒன்று இல்லாமல் போய்விடுமா? உள்ளதை உள்ளபடி மற்றவர்கள் பார்த்துக் கொண்டு போகின்றார்கள். நான் மட்டும் அதனால் ஈர்க்கப்பட்டு (அல்லது வருத்தப்பட்டு) உள்ளதைச் சொல்கிறேன் என்றால் அதற்கான நோக்கந்தான் என்ன? ஏனெனில் ஒரு புலம்பலில் கூட – பொருள் இல்லாவிட்டாலும் நோக்கம் இருந்தே தீரும். இந்த நோக்கம் நல்லதாகவும் இருக்கலாம். கெட்டதாகவும் இருக்கலாம்.

எது நல்லது எது கெட்டது என்பதை அதைச் சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் இடையில் வந்து மூன்றாவது நபர் நின்று கொண்டு தீர்மானிப்பதை நான் ஒருபோதுமே அங்கீகரிக்க மாட்டேன். அத்துடன் இதற்கான விதிவிலக்குச் சந்தர்ப்பங்களுக்கும் தனிப்பட்ட வரையறை வைத்திருக்கின்றேன். ஆக, நல்லது எது என்பதை வாசகர் தீர்மானிப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் சொல்பவர் யார் என்பதில் நோக்கம் வெளிப்பட்டே நிற்கும். இதைப்





புறம்பாக்கி விட்டு 'சொல்வதை மட்டும் பார்' என்று குருட்டாட்டம் போடும் வாதத்தில் எனக்கு உடன்பாடில்லை. அதாவது இங்கே ஆளைப் பார்த்து ஆட்டத்தைப் பார்ப்பதே உண்மையான ரசனையாகின்றது. ஆட்டத்தை மட்டும் பார்த்தால் நாம் நிச்சயம் ஏமாந்து போகவேண்டி ஏற்படும். இது தவிர்க்கப்பட வேண்டும். மரபுசார் எழுத்தாளர்கள் ஆளைப்பார்ப்பதையே கூடுதலாக ஆதரித்து வந்துள்ளனர். ஆனால் புதிய கருத்தை முன்வைப்பவர்களில் பலர் ஆட்டத்தை மட்டும் பார்ப்பதையே தீவிர கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

புதுமைப்பித்தன் காலம் வரையானவர்கள் ஆளைப் பார்த்தார்கள் என்றும் அதன் பின்வந்தவர்கள் ஆட்டத்தை முதன்மைப்படுத்துபவர்களாகவும் இருந்தனர் எனலாம். பண்டிதப் பரம்பரை என்று எள்ளி நகையாடப்பட்ட முதலாவது தரப்பினர் தமக்கென்று ஒரு பிம்பம் ஏற்படுத்திக் கொண்டு அது குலையாதவாறு இருக்க வேண்டும் என்ற அக்கறையோடு –ஏன் சிலவேளைகளில் அந்த அக்கறைக்காகவே எழுதினார்கள் எனலாம். இவர்களது நாயகர்கள் புரட்சி செய்வதில்லை. ஒழுக்கம் போதிப்பவர்களாகவே இருந்துள்ளார்கள். ஆனால் எழுதுபவர்களுக்கு அதையிட்டு ஒரு பெருமை இருந்தது.

ஆனால் புதுமைப்பித்தன் போன்றோர் 'ஆட்டத்தைப்' பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். "என்னவோ அதை எழுதக் கூடாது, இதை எழுதக் கூடாது அப்படீன்னு பாத்திகட்டிப் பூச்சி புடுங்கிறாகளே, அவுஹளுக்கு நம்ம கதை பிடிக்காது, நான்தான் கேக்கிறேன், ஏன்யா? எதை எழுதினா என்ன? அதுக்குக் கூட எனக்குச் சுதந்திரம் கிடையாதா? பெரியவுஹ சொல்றாஹங்கிறதுக்காக உண்மையை மறைக்க முடியுமா? கருவைத் தடை செய்யலாம்; கருத்தைத் தடை செய்ய முடியுமா?" (பறை: 1990). இது பண்டிதப் பரம்பரைக்கு எதிராகப் புதுமைப்பித்தன் எழுப்பிய வினா. இங்கே இரண்டு விடயங்களைப் பார்ப்போம்.

புதுமைப்பித்தன் வரிந்து கட்டிக்கொண்டு வாதாடியது

– எதையுஞ் சொல்லும் உரிமை தனக்கு உண்டென்பதற்காக.

– அதாவது கருத்துச் சுதந்திரம்.

இதைத்தான் எழுத வேண்டும் என்று பண்டிதர்கள் பாத்திகட்டியதை புதுமைப்பித்தன் மோதி மிதிக்கின்றான். இது வரவேற்புக்குரியதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் புதுமைப்பித்தனைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு ஆடிய பிற்காலத்து முற்போக்காளர்கள்

என்ன சொன்னார்கள் தெரியுமோ? இலக்கியத்தில் கூடாதது இருக்கிறது. அவை நச்சு இலக்கியம். ஏகாதிபத்தியத்தை நிரந்தரமாக்கவும் அடிமைத் தளையை இறுக்கவும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் இருப்பு நிலையைப் பேணவும் பயன்படுத்தப் படுவது நச்சு இலக்கியம். இதனை உள்ளே நுழையவிடக் கூடாது எனத் தம்பட்டம் முழக்கினர். ஆயின் புதுமைப்பித்தன் சொன்ன கருத்துச் சுதந்திரம் என்னாயிற்று?

அண்மையில் எழுத்தாள நண்பர் ஒருவர் சொன்னார்:
"ஆயிரம் மலர்கள் மலரட்டும் என்று பேசுகிறார்களே. அப்படியாயின் உண்மையில் 1000 பூக்கள் மலர்கின்றனவா? இவற்றுள் எத்தனை நச்சு இலக்கியமாகும்? இவை யாவற்றையும் மலருக என்று வாழ்த்துவதா.....?" இவ்வாறு அவர் பொரிந்து தள்ளினார்.

என்னால் ஜீரணிக்க முடியாதது யாதென்றால் 'நச்சு இலக்கியம், நல்ல இலக்கியம் என்பவற்றுக்கான வரை விலக்கணத்தைக் கண்டுபிடித்தவர் யார்? இவருக்கு நல்லதாகத் தெரிவது மற்றையவருக்கு 'நச்சாகத்' தெரியக்கூடாதா? அப்படித் தெரியக் கூடாதென்றால் புதுமைப்பித்தன் கூறிய கருத்துச் சுதந்திரம் என்னவாயிற்று.

எதைக் கூறவருகிறேன் என்றால் பண்டித பரம்பரையிலிருந்து விடுபடுவதற்காகப் புதுமைக் கருத்துப் பற்றிப் பேசியவர்கள் தாங்கள் யார் என்பதை புறமொதுக்கிவிட்டுத் தங்கள் கருத்தெல்லாம் புதுமையென்றும் எதிர்ப்பவர்கள் பழமைப் பித்தர்கள் என்றும் ஈழத்து முற்போக்கு நாயகர்கள் இறுகப் பற்றிக் கொண்டார்கள்.

இது ஏற்கனவே நைந்து போய்க் கிடக்கும் முற்போக்காளர் மீது நான் தொடுக்கும் தாக்குதலல்ல. "ஆட்டத்தை மட்டும் பார்' என்று ஒரு தேவைக்காக வாதிடப்போக அதுவே திசைமாறி 'ஊருக்கு உபதேசம் செய்பவர்களாக' மட்டும் முற்போக்காளர் களைக் கொண்டுவந்து நிறுத்தி விட்டது என்ற உண்மையைச் சொல்லுகிறேன் அவ்வளவுதான்.

சமூகம் என்பது தனிமனிதனால் ஆனதுதான். தனிமனிதன் மாறாமல் சமூகம் மாறிவிடாது. சமூகப்புரட்சி, வர்க்கப்புரட்சி என்பதில் மக்களைத் தயார்ப்படுத்தல் 'என்பதே முதற்படியாகும். இங்ஙனம் மக்களை எப்படித் தயார்ப்படுத்துவது? சொல்லும் செயலும் வெவ்வேறாக உள்ளவரால் மக்களைத் தயார்ப்படுத்த முடியுமா? இதுவே இங்கே முற்போக்காளரது முகமூடி பல இடங்களிலும் கிழிக்கப்படுவதற்கு வழிகோலியது. தொப்பிகளைப் பொருத்தமானவர்கள் அணிந்து கொள்ளட்டும்.





மனித ஜீவன் என்றால் சமூகப் பிரக்ஞை இல்லாமலிருக்க முடியாது. இந்த பிரக்ஞையின் இதயநாதமே முதலில் தான் 'சுத்தமாயிருக்க' வேண்டும் என்பதுதான். கார்ள் மாக்ஸும் ஏங்கெல்ஸும் இந்தப் பிரக்ஞையும் சுத்தமும் இல்லாமல் 'கம்யூனிஸ் மெனிபெஸ்டோஃவை' வெளியிட்டிருப் பார்களா?


இனி நடைமுறை உதாரணங் களைப் பார்ப்போம். இதில் நான் பொதுவாகவே குறிப்பிடுகின்றேன். தேவையேற்படின் குறிப்பாகச் சுட்டிக் காட்டவும் முடியும் என்பதை இப்போதைக்குக் கூறிவைக்கிறேன். அருமையான காதல் நாவல் எழுதியுள்ளவர்கள் வீட்டுக்குள் காதலைக் 'குழிதோண்டிப்' புதைத்துள் ளார்கள். சாதியொழிப்புக் கதை எழுதுபவர்கள் வீட்டிற்கு வருபவர் களுக்கென்று 'தனியான' பாத்திரத்தில் தேநீர் கொடுப்பார்கள். எழுந்து போகவிட்டு விமர்சனம் சொல்லும் எழுத்தாளப் பரம்பரை எத்தனை?

தாய்க்குலத்துக்காக கண்ணீர் வடித்து 'அம்மா அம்மா' என்று கதை எழுதியவர்கள் –பலர் எத்தனையோ சிறுசுகளை 'அம்மா'வாக்கி இருக்கிறார்கள். ஒழுக்கம், பண்பாடு, காவியப் பெருமை என்றெல்லாம் பேசிவிட்டுச் சேலைத் தலைப்புகளின் பின்னால் 'வீணி' வடிப்பதிலேயே நாளின் பெரும் பகுதியைக் கழிப்பவர்கள், போக்கிரித்தனத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக சமூக நாவல் எழுதிவிட்டு– நண்பர்களிடம் வாங்கிய பணத்துக்கு 'தொப்பி' போட்டுவிட்டு ஓடியவர்கள், இராமகதை பாடிக் கொண்டே அடுத்தவன் மனைவியின் அழகை ரசிக்கும் யதார்த்தக் கம்பர்கள், கம்யூனிஸ இலக்கியம் படைப்பதாக வெளியில் பேசிவிட்டு வீட்டுக்குள்ளே சாமியறைக் கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளே தோப்புக்கரணம் போடுபவர்கள், ஈழத்திலே சோசலிஸ தத்துவத்தில் இலக்கியத்தைத் தோய்த்துவிட்டு தமிழகம் போய் புனித நீராடிக் கோவிலை ஐந்து சுற்றுச் சுற்றுபவர்கள்– இவர்கள் இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது இவர்களது எழுத்துக்களை இன்னமும் படித்துக் கொண்டிருக் கிறேன்.

நான் கேட்பதெல்லாம் இதுதான். இவர்களது எழுத்து யாருக்குத் தேவை? மீன் சந்தையிலே மீன் விலையில் பேரம்பேசும் சாதாரண அந்தக் குறுக்குக் கட்டுப் பெண்ணுக்குள்ள நேர்மை, தொழில் சுத்தம்– இந்த திசைமாறிய முற்போக்காளர்களிடம் இருக்கிறதா? எது நச்சு இலக்கியம்– யாரால் சமூகத்துக்குக் கூடுதல் தீமை? பதிலை எழுதுங்களேன் பார்ப்போம்.

▣

# மதுராவிடம் கேளுங்கள்



**எம். எம். ரஹ்மான்,**
**கட்டுகஸ்தோட்ட வீதி,**
**கண்டி.**

'திருப்பம்' எத்தகைய ஆக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கும்?

எல்லாவகை ஆக்கங்களுக்கும் இடமுண்டு. ஆனால் புதியவர்கள் என்பதற்காக– தரத்தை ஒரே விதமாக விட்டுக் கொடுத்தல் திருப்பத்துக்கு அழகல்ல. எதைப் பற்றியும் எழுதுங்கள். நாட்டில் எத்தனையோ பஞ்சங்கள். எதையாவது நிவர்த்தி செய்யும் வகையில் எழுதுவதற்கா முடியாது உங்களால்!

**மா. தனேஸ்வரி,**
**ஆரையம்பதி,**
**மட்டக்களப்பு.**

சீதன ஒழிப்பு, சாதியொழிப்புப் பிரச்சாரத்தை முன்னெடுக்கும் விதத்தில் 'திருப்பம்' பங்களிப்புச் செய்யாதா?

நிச்சயமாகச் செய்யும். ஆனால் முகமூடிப் பிரச்சாரம் செய்வதால் ஏதேனும் பிரயோசனம் உண்டா? நல்ல நட்பு, முறையான கல்வி இவற்றால் நிறையவே சாதிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக மனச்சாட்சியுடன் நடக்கப் பழகிக் கொண்டால் அதுவே பெரும் மாற்றங்களைக் கொண்டுவரும்.

**ஆர். குகானந்தன்,**
**கொழும்பு-08.**

'திருப்பம்' இதழுக்குப் பேட்டி தந்த ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டாரே. கண்டிக்கின்றீர்களா?

நிச்சயமாகக் கண்டிக்கிறோம். ஆனால் நீங்கள் டக்ளஸின் பதிலை இன்னொரு முறை வாசியுங்கள். 'மூக்கிருக்கும் வரை சளியிருக்கும்' என்கிறார். இத்தகைய தாக்குதல்கள் யாவும் சளிப் பிரச்சனைதான். எனவே வைத்தியம் நோய்க்குரிய காரணத்துக்குத்தான். சளிக்கல்ல. அந்தக் காரணங்களை வெறும் கண்டனங்களால் களைந்து விட முடியாது. உறுதியான தீர்மானங்களை உரியவர் எடுக்க வேண்டும்.





**பெர்ணடீன் றெஜினால்ட்,**
**2ம் குறுக்குத் தெரு,**
**சிலாபம்.**

ஆசிரியர் பற்றாக்குறையினால் தமிழ்மொழிமூலப் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றனவே. அரசியல்வாதிகள் என்ன செய்கின்றார்கள்?

தமிழைத் தாங்கள் மட்டுமே வளர்த்துக் காக்க வேண்டும் என்று கச்சை கட்டியவர்கள் இன்று கொச்சைகளிடம் தஞ்சம் புகுந்து கொழும்பில் குடியிருக்கிறார்கள். 'சாகும்போதும் தலைவனாகச் சாக வேண்டும்' என்பதற்காக ஏதாவது செய்கிறார்கள். நீங்கள் உங்கள் முறைப்பாட்டு விவரங்களை மனித உரிமைகள் குழு ஒன்றின் கவனத்துக்குக் கொண்டு வரலாமே.

**எஸ். இரகுநாதன்**
**வவுனியா.**

செம்மணி பற்றி அம்மணி என்ன செய்யப் போகிறார்?

யாரையாவது தண்டித்தாக வேண்டும் என்ற கட்டத்தில் அரசாங்கம் வந்து நிற்கிறது. அதுவே பெரிய முன்னேற்றம். செம்மணி – பெரிய குண்டு. எனவே கவனமாகக் கையாள வேண்டும். ஆனால் இது ஒருபோதும் சூரிய கந்தையாக மாறமாட்டாது. ஏனெனில் தமிழ் வாக்குகள் தென்னிலங்கை அரசியலை இனிமேல் தீர்மானிக்கப் போவதில்லை.

**செல்வ. முத்துராஜா,**
**கொழும்பு-15.**

தனியார் தொலைக்காட்சிகள் மலிந்துவிட்டன. அரசாங்கம் தானாகவோ அல்லது தனியார் மூலமாகவோ தமிழ் அலைவரிசை ஒன்றைத் தொடங்க அனுமதிக்க முன்வருமா?

தனியாகத் தொடங்கி என்னத்தைக் கிழிக்கப் போகின்றீர்கள். தமிழகத்து நிகழ்ச்சிகள் தான் தாராளமாக இடம்பெறுகின்றனவே. பதவி உயர்வுக்கும் சலுகைகளுக்கும் ஆலாய்ப் பறப்போருக்கு ஏற்கனவே அரசாங்க அலைவரிசைகள் தஞ்சமளிக்கின்றன. நாம் ஏதாவது சொல்ல வாய் திறந்தால் அதுவும் சென்சாரால் விழுங்கப்பட்டு விடும். இந்த இலட்சணத்தில் எதைக்கேட்டு– எதைப்பார்க்க தனியலைவரிசை–? மழை பெய்தது, காற்றடித்தது, பஸ் ஓடுகிறது, கூரை கட்டுகிறோம் என்று செய்தி பார்க்கவா?

# யாழ்ப்பாண சமூகமும் சீதனப் பிரச்சனையும்

யாழ்ப்பாண சமூகமும் சீதனப் பிரச்சனையும்

## ஒரு மாற்று நோக்கு

கொம்மிஞ்ஞன்

யாழ்ப்பாணமும் சீதனமும் இரண்டறக் கலந்த சொற்கள். சிலர் சீதனமே யாழ்ப்பாணத்தின் பிரதான அடையாளம் என்றும் ஏற்றிக் கூறுவர். சற்று விவரந் தெரிந்தோர் தேசவழமை பற்றி அறிந்திருப்பார்கள். தேசவழமைச் சட்டத்தினால் உருவானதே சீதனம் என்று இவர்கள் வாதிடுவர். தேசவழமைச் சட்டத்தைச் சிலர் சில காரணங்களுக்காக எதிர்ப்பதுண்டு. வேறு பலர் இது தமது பண்பாட்டின் பிரதிபலிப்பு, தேசியத்தின் அடையாளம், தனித்துவத்தின் வெளிப்பாடு என்று கருதித் தேசவழமையை ஆதரிக்கின்றனர்.

தேசவழமை என்பது தேசத்தின் வழமை என்று பொருள். தேசம் என்பது யாழ்ப்பாணமாகக் கருதப்பட்டிருந்தது. ஆனால் டச்சுக்காரர் 1656இல் இங்கு வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் 'யாழ்ப்பாணப் பட்டினம்' என்ற பெயரைக் குடாநாட்டுக்கு அவர்கள் பாவித்தனர். டச்சுக்காரர் யாழ்ப்பாண சமூகத்துடன் பேணிய சுமூகமானதும் நெருக்கமானதுமான உறவினால் தேசவழமை எழுத்துருவுக்குக் கொண்டுவரப் பட்டதுடன் சமூகப் பெரியவர்களது விருப்பத்தை அனுசரித்து அதில் சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் அது பிரிட்டிஷார் காலத்திலும் கோவை வடிவில் தொகுக்கப்பட்டது.

தேசவழமைச் சட்டத்தின் நன்மை, தீமைகள், அதனால் ஏற்பட்ட சமூகத் தாக்கங்கள், அது இனியுந் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்ற வாத நோக்கில் இக்கட்டுரை எழுதப்படவில்லை. தேசவழமைச் சட்டத்தில் அது யாருக்கு ஏற்புடையதாகும், சாதி அமைப்பு முறைமை, திருமணம், பெற்றோர்-பிள்ளை உறவுமுறை, பாதுகாவலர், ஆதனங்களின் வகுப்புப் பிரிவு (முதுசொம், சீதனம், தேடியதேட்டம்) எனப் பல்வேறு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் ஒன்றான சீதனந்தான் பல்வேறு கருத்துப்பாடுகளுக்கும் சர்ச்சைகளுக்கும் இடமளிக்கின்றது. தேசவழமையின் ஏனைய அம்சங்கள் பற்றித் தேவையேற்படின் வேறு





சந்தர்ப்பங்களில் நோக்குவோம். சீதனம் என்ற கருத்துப்பாடு காலப்போக்கில் ஏற்படுத்திய பரிணாம வளர்ச்சியினால் அது இங்ஙனம் புதுவடிவம் பெற்றுள்ளது. இது எப்படி ஏற்பட்டது என்பதை மட்டும் இங்கு பார்ப்போம்.

இந்த விவாதத்தை ஆரம்பிக்குமுன்னர் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். அதாவது இந்துமதம் தென்னிந்தியாவில் தனது கிளைகளைப் பரப்பி ஆரியக் கலாசாரத்தை அறிமுகப்படுத்திய பின்னர் ஈழத்தையும் விட்டுவைக்கவில்லை. இங்ஙனமாக ஈழத்துக்கும் வந்த இந்துமதம் தேசவழமையோடு மோதலை உண்டாக்கிய போது தேசவழமையை அதனால் வீழ்த்திவிட முடியவில்லை. ஆயினும் இந்துமதக் காப்புகள் தேசவழமையில் ஊடுருவி விட்டன என்பதை மறுக்க முடியாது. இன்று இந்தியாவில் இந்துமதச் சட்டமே நடைமுறையிலுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் தேசவழமை நடைமுறையிலுள்ளது. தேசவழமை அவ்வேளையில் அற்றுப் போயிருந்தால் அந்த இடத்தை நிச்சயம் இந்தச் சட்டமே நிரப்பியிருக்கும். இலங்கையில் முஸ்லீம்களுக்கு முஸ்லீம் சட்டம் ஏற்புடையதாவதும் இந்த அடிப்படையில்தான்.

இனிச் சீதனத்துக்கு வருவோம். தமிழர் சமூகம் அதனது ஆரம்ப நிலையிலிருந்தபோது – திருமணத்தினால் வரும் வழியுரிமைகள் (சந்ததி) பற்றிய ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமை எதுவும் இல்லாதிருந்தது. தேசவழமையை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தவர்கள் கேரளாவின் கோரமண்டல், மலபார் கரையோரங்களிலிருந்து வந்த மக்கள் என்பதைக் கவனிக்கவும். இவர்களே யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் குடியேறியவர்களாக இருக்க வேண்டும். எனவே இவர்கள் இந்தத் திருமணத்தினால் வரும் சந்ததி உரிமை முறை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் ஆவலில் இருந்தனர். மலபார் மக்கள் கொண்டுவந்த மருமக்கட்தாயம் என்ற சட்டத்தினூடாகச் 'சீதனம்' என்பது வந்து சேர்ந்தது எனச் சிலர் கருதுகின்றனர். மருமக்கட்தாயம் முறை சிறிது காலம் மட்டக்களப்பில் பாவிப்பிலிருந்துவிட்டுப் பின்னர் வழக்கொழிந்து போய்விட்டது. ஆனால் தேசவழமைக்குள் அது இடம் பிடித்துவிட்டது.

'சீதனம்' என்பதன் தொடக்கம் எது என்பதில் பல்வேறு அபிப்பிராயங்களுள்ளன. சிலபேர் மலபார்தான் இதன் ஆரம்ப இடம் என்கிறார்கள். கலாநிதி தம்பையா போன்றோர் இதனை ஏற்கவில்லை

இவர்கள் கருத்தில் இது இந்துச் சட்டத்திலிருந்து வந்து கலந்ததாகும். சமஸ்கிருதத்தில் 'Siridhana' என்றிருப்பதே தமிழில் சிறிதனவாகிச் சீதனமாயிற்று என்கிறார்கள். ஞாக்யவல்லிஸ்மிருதியின் 85வது சுலோகம் வருமாறு கூறுகிறது: "ஸ்வாதந்திரம் நா க்வியச்சின் ஸ்திரியாக்" இதன் பொருள் "பெண்ணானவள் சுதந்திரமாக இருக்க முடியாது" என்பதாகும். இந்து மதம் தந்தைவழிச் சமூகமொன்றின் பழக்கங்கள், நடைமுறைகள் என்பவற்றாலானதாகும். ஆனால் தேசவழமை முற்றிலுமே தாய்வழிச் சமூக அமைப்பொன்றுக்குரியது.

திராவிட-ஆரிய பாரம்பரிய வேறுபாடென்பதுவும் இதுதான். ஆரியர் வருகை மட்டும் இந்துமதத்தைப் பற்றித் திராவிடர் அறிந்திருக்கவில்லை என்பதுடன் தந்தைவழிச் சமூக அமைப்பொன்றையும் திராவிடர் கேள்விப்படாதவராகவே இருந்து வந்துள்ளனர். பெண் தன்னளவில் சுதந்திரமற்றவள் என்றால் பெண் தன்னளவில் சொந்தமாக ஆதனமும் கொண்டிருக்க முடியாது என்ற சட்ட ஏற்பாடு ஸ்மிருதியின் மறுவார்த்தை தவிர வேறொன்றுமில்லை. ஆனால் இந்துச் சட்டத்தின் கீழான கூட்டுக் குடும்பமும் கூட்டுச் சொத்தும் என்ற மிகக் கடுமையானதும் பாரபட்சமானதுமான முறையைத் தவிர்ப்பதற்காகத் திராவிடப் பாரம்பரியம் 'சிறிதன' முறையைக் கைக் கொண்டதோ தெரியவில்லை என்று சிலர் சமாதானப்படுவதுமுண்டு.

ஆக, இந்துச் சட்டத்திலிருந்து வந்ததுதான் சீதனமுறையென்றும் அது திராவிடரின் உண்மையான பழக்கமல்லவென்றும் தேசவழமை தவறுதலாக இதை உள்வாங்கியதால் இன்றும் இது நிலைத்துவிட்டது என்றும் ஒருசாரார் கருதுகின்றனர்.

மறுபுறத்தில், தேசவழமையையும் சீதனத்தைப் பற்றியும் தவறாகப் புரிந்து கொண்டவர்களே சீதனத்தை இந்துச் சட்டத்திலிருந்து வந்ததெனக் கூறுகிறார்களென்றும் சீதனம் என்பது தாய்வழிச் சமூகத்திலிருந்து வந்திருக்கக் கூடிய மிக நுணுக்கமான (உரோமன் சட்ட ஏற்பாடுகள் சிலவற்றையொத்த) ஏற்பாடென்றும் இது காலப்போக்கில் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டுவிட்டது என்றும் சிலர் வாதிடுகின்றார்கள்.

மேற்சொன்ன இரு கருத்துக்களில் பின்னையதை ஆதரிப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இந்துச் சட்டத்திலிருந்தும் ஆரியக் கலாசாரத்திலிருந்தும் பல ஏற்பாடுகளை தேசவழமை உள்வாங்கியிருக்கலாம்.



ஆனால் சீதனம் என்பதும் அங்கிருந்துதான் வந்தது என்பது சீதனத்தின் அடிப்படை இயல்பையே மாற்றியதாக அமைந்துவிடும் என வாதிடுவதே என் நோக்கமாகும்.

## சீதனம் என்றால் என்ன?

சீதனம் என்பது திருமணத்தின் போது கொடுக்கப்படுவதாக இருக்கலாம். அல்லது அதற்கு முன்பின்னாகக்கூடக் கொடுக்கப்படலாம். ஆனால் சீதனத்தின் நோக்கம் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். இதனைச் சட்டத்தில் பிரதிபயன் (consideration) என்கிறார்கள். எந்த ஒப்பந்தமும் பிரதிபயனில்லாமல் வலுப்படுத்தப்பட முடியாததாகும். எனவே திருமணம் என்ற ஒப்பந்தத்துக்கு இது ஒரு பிரதிபயனாக அமைந்து திருமணத்தை வலிதாக நிலைநிறுத்துகிறது.

ஆக, சீதனம் என்பது பெண்ணின் சுதந்திரம், சமூக அந்தஸ்து என்பவற்றைத் தாழ்வாக்குவதாக அன்றி திருமண ஒப்பந்தத்தின் வலிதுடைமையைக் கருத்திற் கொண்டு உருவாகியதாகும். "ஆறு பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்று கூறுவதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதன் தாற்பரியம் ஆறு பிள்ளைகளுக்கும் சீதனம் கொடுத்துவிட்ட நிலையில் அவனிடம் எதுவும் எஞ்சியிருக்காது என்பதாகும்.

தேசவழமையின் கீழான சீதனத்தில் - வாரிசுகளற்ற பெண்கள் எவ்விதத்திலும் விலக்கப்படுவதில்லை. ஆதனத்தைக் கைமாற்றுவதில் பெண்ணுக்கும் ஆணுக்குமிடையில் ஒரேவிதமான அதிகாரமே வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வழியுரிமைச் சட்டத்தில் மத அல்லது ஆன்மீக நலன்களின் அடிப்படையில் சொத்துக்கள் பிரிக்கப்படமாட்டா.

மலபாரில் (கேரளா) வசித்து வந்த மக்களிடையே நன்கு ஸ்தாபிதமாயிருந்த மருமக்கட்தாயம் சட்டம் என்பது தாய்வழிச் சமூக அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ப ஒழுங்கமைப்பை இலக்காகக் கொண்டதாகும். இச்சட்டத்தில் *"Thavazhi"* என்றால் தாயின் பக்கம் என்று பொருள். இதைப் பெண்வழி உரிமையாளர்கள் என்று நீட்டிக்கலாம். இதை ஆண்வழியில் பாவித்தாலும் அந்த ஆணின் தாய்வழி உரிமையாளர் என்றே பொருள்படும். எனவே கணவனது அல்லது மனைவியினுடைய தாய்வழி உறவினர் என்ற பொதுவான கருக்கத்தை இது தருகின்றது.

Madras Marumakkattayam Act பற்றி எழுதிய Nair இதுபற்றி Logan என்பவரது எழுத்துக்களை ஆதாரங்காட்டிக் கூறுகையில், கேரளாவில் *Tarwad* என்ற ஏற்பாடானது உரோமர்கள் கூறும் *gens* என்பதை ஒத்ததாகும். இங்கே ஒரே *gens* ஐச் சேர்ந்தவர்கள் என்பது இறுதியில் பின்னோக்கிப் போய் ஓர் ஆணின் வழியில் முடிவடைகிறது. *Tarwad* குழுவினர் தமது பின்னோக்கிய மரபினை பெண்ணொருவரின் வழியில் போய் முடிக்கிறார்கள்.

தேசவழமைச் சட்டக் கோவையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"திருமணத்தின் போது கணவனாலும் மனைவியாலும் கொண்டுவரப்படும் சொத்துக்கள் பெயரிடப்படுகின்றன. கணவனால் கொண்டுவரப்படும் சொத்துக்கள் முதுசொம் என்றும் மனைவியால் கொண்டுவரப்படும் சொத்துக்கள் சீதனம் என்றும் அடையாளங் காணப்பட்டன. திருமண காலத்தில் இவர்களால் வாங்கப்படும் சொத்துக்கள் தேடிய தேட்டம் எனப்படுகிறது. ஆனால் இங்ஙனம் வாங்குவதற்கு- சீதனப் பொருளை (பணத்தை) பாவித்தால் அங்ஙனம் வாங்கப்படும் சொத்தும் சீதனமாகவே கருதப்படும்."

ஆனால் தேசவழமைக் கோவை 1911இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தினால் மாற்றத்துக்குள்ளானது. பின்னர் 1947 இல் இன்னொரு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிலைமை சீர்செய்யப்பட்டது. இவை குறிப்பாக, கணவன், மனைவி என்ற வாழ்க்கைத் துணைவருள் ஒருவர் இறப்பின் எங்ஙனம் சொத்துக்கள் பகிரப்படும் என்பதன் அடிப்படையில் எழுந்தவையாகும்.

கொடையும் சீதனமும் வெவ்வேறானவை. முக்கிய வேறுபாடு கொடை என்பதில் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட 'பிரதிபயன்' என்பது அவசியமல்ல. பிரதிபயனில்லை என்பதால் கொடை ஒன்று வலிதிழக்கப்பேர்வதில்லை. கொடை யாருக்குமே (மகன், மகள், சுற்றத்தார்) கொடுக்கப்படலாம். எனவே மகன் கூட கொடையைப் பெறமுடியும். ஆனால் சீதனம் அப்படியல்ல. பெண் பிள்ளைகளுக்கு மட்டுமே கொடுக்கப்படலாம். அத்துடன் சீதனம் கொடுக்கப்படும் வரை பெற்றோரின் சொத்துக்களில் ஆண்பிள்ளைகள் உரிமை கோர முடியாது என்று கோவையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேவேளை, சீதனம் கொடுக்கப்பட்ட பிள்ளை அதன் பின்னர் பெற்றோரின் சொத்தில் பங்கு கேட்க முடியாது.





## பெண்ணுக்குப் பாதகமானதா?

சீதனம் கொடுத்தல் என்பது அல்லது அதனை தேவைப்படுத்தல் (demand) என்பது இன்று பெரிய சமூகப்- பிரச்சனையாக மாறிவிட்டதால் இது பெண்ணுக்குப் பெருஞ்சுமை என்றும் இதனாலேயே பல யுவதிகள் திருமண வயதில் இன்னும் கனவுலகிலேயே இருக்கின்றனர் என்றும் பொதுவான குற்றச்சாட்டொன்று யாழ்ப்பாண சமூகம் மீது சுமத்தப்படுவதுண்டு. மட்டக்களப்பில், திருகோணமலையில், மலையகத்தில், கொழும்பில் நிரந்தரமாக வசிக்குந் தமிழர்களுக்கிடையில் சீதனம் ஒரு பிரச்சனையாக இல்லையென்று ஒப்பீட்டளவில் கூறப்படுகின்றது. உண்மைதான். இந்தப் பகுதிகளில் வாழ்பவர்கள் அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் தேசவழமையால் ஆளப்படாதவர்கள். சீதனம் தேசவழமைக்குட்பட்டவர்களையே ஆட்டிப் படைக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் காரணந்தான் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை.

சீதனங் கொடுக்க முடியாத பெண்ணின் நிலையென்ன? தேசவழமைதானே இதற்கு வழி செய்தது என்று உடனேயே எரிந்து விழுதல் தப்பென்பதே எனது கருத்து. தேசவழமைச் சட்டத்தில் சீதனம் என்பது திருமணம், அதன் பின்னரான வழியுரிமை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒரு பிணைப்பாக ஒட்டிக் கொண்டிருக்கிறதே தவிர அது திருமணத்துக்குக் காரணமாவதல்லை. திருமணத்தின்போது கொடுக்கப்படும் சொத்தைப் பெண்ணுக்காகப் பாதுகாத்து அது கணவனால் துஷ்பிரயோகஞ் செய்யப்படாதபடி கவனித்தல் பெண்ணுக்குப் பாதகமானதா? இல்லை. இதனால் கணவனுடைய செயற்பாட்டுப் பரப்புத்தான் கட்டுப்படுத்தப்படுகின்றது.

சிலவேளை திருமணஞ் சீர்குலைந்து விவாகரத்தில் முடிவடைந்தால் கூட சீதனச் சொத்துக்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும். அங்ஙனம் ஒப்படைக்கப் படும்போது சீதனச் சொத்தில் ஏதேனும் ஏற்கனவே செலவாகிவிட்டால் அல்லது குறைந்துவிட்டால் அவை கணவனால் சரிசெய்யப்பட வேண்டும். இந்த ஏற்பாடு யாருக்குப் பாதுகாப்பளிக்கின்றது. ஆணுக்கா இல்லை பெண்ணுக்கா?

மனைவி இறந்துபோனால் சீதனச் சொத்துக்கள் மனைவியின் வழிக்கே திரும்பிப் போகின்றது. அதாவது அச்சொத்து கணவன்-

மனைவி இருவரதும் பொதுப் பாவிப்புக்குரியதன்றி- கணவனால் ஒருபோதும் தனித்துப் பாவிக்க முடியாது என்ற பாதுகாப்பு தேசவழமையில் உண்டு. மனைவி இறந்த நிலையில் கணவன் சீதனச் சொத்தைத் தன் பெண்பிள்ளைகளுக்குச் சீதனமாக மட்டுமே கொடுக்க முடியுமே தவிர வேறு வழியில் கையாள முடியாது.

பொதுவான இன்னொரு குற்றச்சாட்டு யாதெனில், தேச வழமைக்குள் வரும் பெண்ணினால் கணவனின் கையெழுத்தின்றிச் சொத்து மாற்றம் செய்ய முடியாது. ஆனால் இந்த மட்டுப்பாடு ஆணுக்கில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இரண்டு விதமான ஆதனங்களை இங்கே நாம் பார்க்க வேண்டும். சீதனச் சொத்தைப் பொறுத்தளவில் அதனைக் கையாளுதல் என்பது மனைவியின் சம்மதமின்றி முடியாது. தேடிய தேட்டம் என்ற சொத்தாயின் ஆளுக்குப் பாதி என்ற அடிப்படையில் உரிமையுண்டு. இங்கே மனைவி தன் பங்கை விற்பதில் கணவன் வேண்டுமென்றே அனுமதி மறுத்தால் அந்த அனுமதியைப் பெற்றுத் தருமாறு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

இதைவிட யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நில அமைப்பும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இப்பிரதேச அமைப்பானது மிக இறுக்கமாகவும் கலாசாரங்களால் கட்டுண்டவையுமாக இருப்பதற்கு என்ன காரணம்?

மக்களுஞ்சரி, காணிகளுஞ்சரி ஒன்றோடொன்று ஒட்டி உறவாடாமல் அங்கு முழு நலன்களையும் துய்க்க முடியாது. உதாரணமாக, காணிகளில் வயல்வழியாக நடந்துபோதல், கிணற்றுப் பங்கு, சிலவகைச் சேவக உரித்துக்கள் (பாதையுரிமை) போன்றவை யாழ்ப்பாண மண்ணில். அந்த நிலவமைப்புக் காரணமாகத் தேவையாகின்றன. இதன் காரணமாக அயற்காணிகள் 'புறத்தார்' கைகளில் போய்விடாமல் பார்த்துக் கொள்ளும் தேவையெழுகின்றது. இதுதான் சீதனச் சொத்து வேறிடங்களுக்கு நகராமல் மீண்டும் தாய்வழியில் சேருவதற்கான வழிவகை செய்யப்பட்டிருப்பதற்கான காரணமாகும்.

(இன்னும் வரும்)





# கிடைக்கப் பெற்றோம்

திருப்பம் ஆசிரிய பீடத்துக்கு வந்து சேர்ந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றின் விபரங்களைக் கீழே தருகின்றோம். போர்க்காலச் சூழலிலும் ஏமாற்றகரமான அரசியல் சூழலிலும் இருந்து கொண்டு இவ்வளவு ஆக்கங்கள் வருகின்றனவா என்று எண்ணும்போது நாங்கள் குறுகிப் போகிறோம். வெளிநாடுகளிலிருந்தும் சஞ்சிகைகள் வருகின்றன. 'திருப்பம்' ஐரோப்பிய நாடுகளில் அக்கறையான அறிமுகத்தைப் பெற்று வருகின்றதான பெருமைச் செய்தியையும் கேள்வியுற்றோம். நன்றி!

தங்களது நூல் பற்றிய விமர்சனத்தை திருப்பத்தில் எதிர்பார்ப்பவர்கள் தயவு செய்து இரண்டு பிரதிகள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். வந்து சேர்ந்தவற்றுள் இயன்றவரை இம்முறை பிரசுரிக்கின்றோம். விமரிசனங்கள் சில அடுத்த இதழில் ஆரம்பமாகும்.

**தேர்தல்**

*மறுபடியும் சிரிக்கின்றன சுவர்கள்*
*தீட்டுங்கள் கூராய் - - -*
*பென்சிலை!* —அம்சா—

1. சஞ்சிகை : **களம்**
   மலர் 9 – மே 1998
   விலை ரூபா 40/=
   இணை ஆசிரியர்கள்:
   பாராஸ் வாரித்தம்பி
   அன்ரனி பால்ராஜ்
   தொடர்பு முகவரி:
   திருமதி. வி. சிவயோகம்,
   7-8 பிரதான வீதி,
   அக்கரைப்பற்று-07.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், திறனாய்வுகள் என மிகக் கனமான விடயங்கள் பல தாங்கி வந்திருக்கிறது இவ்விதழ். 60 பக்கங்களில் அழுத்தமான, உறைப்பான விடயங்கள் காவி வந்துள்ளது. ஏற்கனவே அங்கீகாரம் பெற்றவர்களதும் புதுமுகங்களதும் படைப்புக்கள் சோடைபோகாத வலுவான தளத்தில் வரிவடிவம் பெற்றுள்ளன.

2. சஞ்சிகை : **எக்ஸில் (EXIL)**
   Vol.1, No.1. May, June 1998
   தொடர்புகளுக்கு:
   Chez R. INPAVALLI
   94, rue de la chapelle,
   75018 PARIS,
   FRANCE.

புலம் பெயர்ந்தோர் *வெளியீடு. பயனுள்ள கட்டுரையாகச் சில மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் அமைந்துள்ளன. 10 வருடங்களுக்கு முன்வந்த Some Questions on Feminism and its Relevance in South Asia என்ற சிறுநூலிலிருந்து சில பகுதிகளை லஷ்சுமி தமிழில் தந்துள்ளார். பயனுள்ளதாகத் தெரிகிறது. ஏனைய கதைகளிலும் கட்டுரைகளிலும் 'யாழ்ப்பாணத் திமிருக்கு' எதிரான சாடலும் சாதியமைப்பு மீதான பாய்ச்சலுமாக இடத்தை நிறைத்துள்ளன. புதுப்போக்குகளைப் புரிந்து கொள்ள உதவும் சஞ்சிகை. மாற்குவின் குறுஞ்சித்திரமும் குறிப்பிடத்தக்கது.

3. பத்திரிகை : **ஆத்மா**

தேடல் 3 – மே 1998

விலை ரூபா 5/=

வெளியீடு:

மனிதம் கலந்தாய்வுக் குழு
111/3, மடம் வீதி
யாழ்ப்பாணம்.

மாத இதழ் என்றே ஊகிக்க முடிகின்றது. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய கட்டுரையும் 'செந்நீர் கோவணங்கள்' நாடக விமரிசனமும் குறிப்பிடத்தக்கதாயுள்ளன. பயனுள்ள விடயங்கள். நயமான எழுத்து நடை. இதுவும் மனிதத்தின் இருப்பைத் தேடும் 'ஆத்மா' தான். வரவேற்கின்றோம்.

4. பத்திரிகை : **காலைக்கதிர்**

வார இதழ்: கதிர் 2(ஜூன் 05–11,1998)

விலை ரூபா 8/=

தொடர்பு முகவரி:

காலைக்கதிர் நிறுவனம்,
த. பெட்டி இல. 145,
யாழ்ப்பாணம்.

வழக்கமான பத்திரிகை அம்சங்களே. நடுநிலைப் பத்திரிகை என்று காட்டவேண்டும் என்ற ஆதங்கத்தில் செய்திகள் தேடி வெளியிடப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டம் அலசப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள் மீது தாக்குதலும் உள்ளது. அரசாங்க சார்பற்ற நிறுவனங்களது மோசடிகள் பற்றி விளக்க ஓர் இந்தியக் கட்டுரை தரப்பட்டுள்ளது. மிகவும் பயனுள்ள, விழிப்பு ஏற்படுத்தும் விடயமுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பாராட்டுகிறோம்.

5. சஞ்சிகை :

**தென்கிழக்கு ஆய்வமையத்தின் இலக்கிய மடல்**

ஆசிரியர் : இக்பால் அலி

அன்பளிப்பு: ரூபா 10/=

தொடர்பு முகவரி:

P. M. Jamahir,
University Mosque,
University of Peradeniya,
Peradeniya.

T.P.: 077-801512

13 ☞




## திருப்பம் வீடு தேடி வர........!

'திருப்பம்' மேன்மேலும் மெருகுடன் திகழ்வதற்குத் தங்களின் அரவணைப்பே ஒரேயொரு துணையாகும் என்பதை நீவிர் நன்கு அறிவீர்கள். ஆகையால் உங்களின் ஆதரவும் நல்லாசியும் செயலுருப்பெறும் விதத்தில் திருப்பத்துக்கான ஆண்டுச் சந்தாத் தொகையை எங்களுக்கு அனுப்பி வைத்து உதவுமாறு நட்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

வெறுமனே ஜனரஞ்சக சஞ்சிகையாகவோ, அல்லது விளம்பரங்களை மட்டும் நம்பிய நிலையிலோ நாங்கள் 'திருப்பத்தை'ப் பிரசுரிப்பதில்லை என்பதை அறிவீர்கள். எனவே தங்களைப் போன்றோரின் ஆதரவின் முக்கியத்துவம் சொல்லாமலே விளங்கும் என நினைக்கின்றோம். தங்களின் உதவி தரமான கருத்துக்களாக உருமாறி எம்மவர் மத்தியில் நடமாடி எதிர்பார்க்கும் திருப்பம் ஏற்பட வழிசமைக்க வேண்டாமா?

காசோலையினை A/C Payee only எனக் குறுக்குக் கோடிட்டு V. T. THURAISINGHAM என்ற பெயரில் அல்லது காசுக்கட்டளையை இதே பெயரில் Colombo University Post Office இல் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## ஆண்டுச் சந்தாப் படிவம்

ஆண்டுச் சந்தா 15 ஏப்ரல் 1998 முதல்
15 மார்ச் 1999 வரை
ரூபா 25/= x 12 = ரூபா 300/=
(தபால் செலவு இலவசம்)

**பெயர்** : ..................

**சஞ்சிகை கிடைக்க**
**வேண்டிய முகவரி** : ..........................
..........................

*தொடர்பு வசதிக்காக :*

**தொலைபேசி இல.** : ...............

**முகவரி** : ..........................
..........................

இத்துடன் ரூபா 300/= க்கான காசோலை/காசுக்கட்டளை இணைத்துள்ளேன்.

________ திகதி

________ கையொப்பம்

# விற்பனையாகின்றன:

- தமிழ்மாறன் கட்டுரைகள்
  —வி.ரி.தமிழ்மாறன்
- தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்
  —வி.ரி..தமிழ்மாறன்
- அபிவிருத்தியும் கல்வியும்
  —பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
- கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள்
  —பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
- கல்வியும் உளவியலும் (பகுதி- 11)
  —கலாநிதி ச. முத்துலிங்கம்
- சிறுவர் பக்திக் கதைகள்
  —த. துரைசிங்கம்
- பாட்டுப் பாடுவோம்
  —த. துரைசிங்கம்

*பிரதிகளுக்கு :*

***லங்கா புத்தகசாலை,***

*F.L - 1. 14, டயஸ் பிளேஸ்,*

*குணசிங்கபுர,*

*கொழும்பு – 12*

*தொ.பேசி : 341942*